பக்கங்கள் : பத்து

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 10.00

www.uthayan.com

சுடர் 21 வள்ளுவர் ஆண்டு 2037 வைகாசி 17 புதன்கிழமை (31.05.2006) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர் : 184

## வன்முறையைக் கைவிட்டுப் பேச்சுக்குத் திரும்ப புலிகளுக்கு வற்புறுத்து

# ஆயுதக் குழுக்களின் பயங்கரவாதத்தை இலங்கை விரைந்து தடுக்க வேண்டும்!

## இணைத் தலைமைகள் கூட்டறிக்கை

கொழும்பு, மே 31

**★ விடுதலைப் புலிகள் அமைப்பு பயங்கரவாதம், வன்முறை ஆகியவற்றைக் கைவிட்டு உடன் அமைதிப் பேச்சுகளுக்கு மீளத் திரும்ப வேண்டும்.**

**★ இலங்கை அரசு தனது கட்டுப்பாட்டுப் பகுதிகளில் வன்முறை மற்றும் பயங்கரவாதச் செயல்களில் ஆயுதக் குழுக்கள் ஈடுபடுவதைத் தடுக்க உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும்.**

**- இவ்வாறு பகிரங்கமான கூட்டறிக்கை மூலம் கோரியிருக்கின்றன இலங்கைக்கு உதவும் நாடுகளின் இணைத் தலைமைகள்.**

கருணா மற்றும் ஈ.பி.டி.பியின் வன்முறை மூலங்களின் தாக்குதல்களைத் தடுக்க இலங்கை அரசு தவறி விட்டதாகவும் இணைத் தலைமைகள் குற்றம் சுமத்தியிருக்கின்றன.

இணைத் தலைமை நாடுகளின் கூட்டம் ஜப்பானின் தலைநகர் டோக்கியோவில் நேற்று நடைபெற்றது.

இந்தக் கூட்டத்தில் ஜப்பானின் சார்பில் அதன் இலங்கை அமைதி முயற்சிகளுக்கான விசேட தூதுவர் யசூசி அகாஷி, அமெரிக்காவின் சார்பில் மத்திய மற்றும் தெற்காசிய விவகாரங்களுக்குப் பொறுப்பான அமெரிக்காவின் உதவி இராஜாங்க அமைச்சர் ரிச்சட் பௌச்சர், நோர்வே சார்பில் அந்த நாட்டின்

(02ஆம் பக்கம் பார்க்க)

## வவுனியாவில் கிளைமோர் இரு பொலீஸார் காயம்

கொழும்பு, மே 31

வவுனியாவில் மன்னார் வீதியில் நேற்றுக் காலை 7.15 மணியளவில் இடம்பெற்ற கிளைமோர்த் தாக்குதலில் இரண்டு பொலீஸார் காயமடைந்தனர்.

மன்னார் வீதியில் - 11ஆம், 12ஆம் மைல்கற்களுக்கு இடைப்பட்ட பகுதியில் - இச்சம்பவம் இடம்பெற்றது.

காயமடைந்த இரு பொலீஸாரும் முதலில் வவுனியா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டனர். பின்னர் மேலதிக சிகிச்சைக்காக அநுராதபுரம் வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்டனர்.

இந்த இருவரில் ஒருவரது நிலை கவலைக்கிடமாக இருப்பதாகத் தெரிவிக்கப்பட்டது.

(க)

## வந்தது ஐரோப்பிய ஒன்றியத் தடை!

பிரஸல்ஸ், மே 31

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தை ஐரோப்பிய ஒன்றியம் பயங்கரவாத அமைப்புகளின் பட்டியலில் இணைத்து அதன் மூலம் அதற்கு எதிராகத் தடைவிதித்திருக்கிறது.

பெல்ஜியத்தின் பிரஸல்ஸ் நகரில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற ஐரோப்பிய ஒன்றிய அமைச்சர்களின் கூட்டத்தில் இது தொடர்பான தீர்மானம் எடுக்கப்பட்டது.

இந்தத் தீர்மானத்திற்கமைய, ஐரோப்பிய ஒன்றிய நாடுகளில் விடுதலைப் புலிகள் இயக்கத்தின் வங்கிக் கணக்குகள், சொத்துகள் என்பன முடக்கப்படவுள்ளன.

(02ஆம் பக்கம் பார்க்க)

## தடை குறித்து இலங்கை அரசு அறிக்கை

கொழும்பு, மே 31

விடுதலைப் புலிகள் மீது ஐரோப்பிய ஒன்றியம் விதித்திருக்கும் தடை இலங்கையின் அமைதிப் பேச்சுகளில் பெரும் திருப்பத்தை ஏற்படுத்துமென்று இலங்கை நேற்று நம்பிக்கை வெளியிட்டிருக்கிறது.

விடுதலைப் புலிகள் இயக்கத்தை ஐரோப்பிய ஒன்றியம் தடை செய்திருப்பது தொடர்பில் கொழும்பில் ஜனாதிபதி செயலகம் நேற்று அறிக்கையொன்றை விடுத்துள்ளது. அதிலேயே மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டிருந்தது. அதில் மேலும் கூறப்பட்டிருப்பதாவது:-

ஐரோப்பிய ஒன்றியத்தின் இந்தத் தடை

(10ஆம் பக்கம் பார்க்க)

## பங்குச் சந்தையில் சடுதிச் சரிவு!

கொழும்பு, மே 31

விடுதலைப் புலிகள் இயக்கத்தை ஐரோப்பிய ஒன்றியம் தடைசெய்த செய்தி வெளி வந்ததையடுத்து கொழும்பு பங்குச் சந்தை நேற்று திடீர் வீழ்ச்சியைச் சந்தித்திருக்கிறது.

நேற்றுமுன்தினம் 20.64 புள்ளிகளாக இருந்த அனைத்துப் பங்கு விலைச்சுட்டெண் நேற்று 6.87 புள்ளிகளாக சடுதியாக வீழ்ச்சியடைந்தது. வங்கித்துறை முதலீடு நேற்றைய தினம் பெரும் பின்னடைவைக் கண்டதாக கொழும்பு பங்குச் சந்தை வட்டாரங்கள் கூறின.

(10ஆம் பக்கம் பார்க்க)

## ஐரோப்பிய ஒன்றியத் தடை மூலம் புலிகளிடமிருந்து புலம்பெயர்ந்த தமிழர்களை ஓரங்கட்டிவிட முடியாது!

### நோக்கம் அதுவே என்றால் அது வரலாற்றுத் தவறாகவே முடியும் என்கிறார் பாலா

லண்டன், மே 31

"ஐரோப்பிய நாடுகளில் வதியும் புலம்பெயர்ந்த தமிழீழ மக்களின் அரசியல் ஆதரவையும், பொருளாதார உதவிகளையும் தடுத்து நிறுத்தி, எமது மக்களிடமிருந்து எமது விடுதலை இயக்கத்தை அந்நியப்படுத்தி, ஓரம் கட்டி விடலாம் என ஐரோப்பிய ஒன்றியம் கருதுமானால் அது மிகப்பெரிய வரலாற்றுத் தவறாகவே முடியும்."

-இவ்வாறு குறிப்பிட்டிருக்கின்றார் தமிழீழ விடுதலைப் புலிகளின் மதியுரைஞரும், பேச்சுக் குழுத் தலைவருமான அன்ரன் பாலசிங்கம்.

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்துக்கு எதிராக ஐரோப்பிய ஒன்றியம் தடைவிதித்திருப்பது குறித்துக் கருத்துக் கேட்டபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் கூறியதாவது:-

ஐரோப்பிய ஒன்றியத்தின் நியாயமற்ற - பக்கச் சார்பான - தீர்மானத்தால் ஒருபுறம் வேதனையும், மறுபுறம் சினமும் அடைந்திருக்கும் புலம் பெயர்ந்த தமிழர்கள் புலிகள் இயக்கத்துக்கும் அவர்களின் தலைமையில்

(02ஆம் பக்கம் பார்க்க)

## பனைமரம் தறித்த படையினர்மீது சூடு: சுழிபுரத்தில் இரு சிப்பாய்கள் காயம்

வலி.மேற்கு,31

சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரிக்குச் சமீபமாக நேற்று நண்பகல் ஒரு மணியளவில் படையினர்மீது மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் இருபடையினர் காயமடைந்தனர் எனக் கூறப்பட்டது.

அந்தப் பிரதேசத்தில் படையினர் பனைமரங்களைத் தறித்துக்கொண்டு நின்றனர் என்றும் அந்த வேளையில் அவர்கள்மீது துப்பாக்கிப்பிரயோகம் மேற்கொள்ளப்பட்டது என்றும் - கூறப்பட்டது. படையினர் பதிலுக்கு வேட்டுக்களைத் தீர்த்ததையடுத்து அந்தப் பகுதியில் உள்ள கடை கள் மூடப்பட்டு பரபரப்பு நிலவியது.

(175-29)

## வெலிகந்தையில் 13 சிங்களவர்கள் திங்களன்று இரவு சுட்டுக்கொலை

வெலிகந்தை, மே 31

வெலிகந்தைப் பிரதேசத்தில் சிங்களவர் 13 பேர் இனந்தெரியாத நபர்களால் சுட்டுக் கொல்லப்பட்டனர்.

பொலன்னறுவை - மட்டக்களப்பு எல்லையிலுள்ள வெலிகந்தையிலிருந்து பத்துக் கிலோமீற்றர் தொலைவிலுள்ள ஓமடியாமடு எனும் கிராமத்தில் நேற்றுமுன்தினம் இரவு இந்தச் சம்பவம் இடம்பெற்றிருக்கின்றது.

இந்தச் சம்பவத்தில் காயமடைந்த இருவர் வெலிகந்தை மற்றும் பொலன்னறுவை வைத்தியசாலைகளில் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்டனர்.

(10ஆம் பக்கம் பார்க்க)

## அராலியில் மீட்கப்பட்ட மீனவர் சடலங்களில் தலையிலும், நெஞ்சிலும் சூட்டுக்காயங்கள்

யாழ்ப்பாணம்,மே31

அராலி மத்தி, ஊரத்திப் பகுதியில் உள்ள மேட்டிலிருந்து மீட்கப்பட்ட இரு மீனவர்களின் சடலங்களிலும் துப்பாக்கிச் சூட்டுக் காயங்கள் காணப்பட்டன என்று மரண விசாரணையில் தெரிவிக்கப்பட்டது.

கடந்த ஞாயிற்றுக்கிழமை அதிகாலை மீன்பிடிக்கச்சென்ற நாகராசா செல்வராசா (வயது 36), நடராசா சபேஸ்கரன் (வயது 31) ஆகியோரின் சடலங்கள் வெட்டுக்காயங்களுடன் நேற்று [illegible]

(10ஆம் பக்கம் பார்க்க)

## சிங்கள மக்களின் கொலைக்கு விடுதலைப் புலிகள் கண்டனம்

இலங்கையின் கிழக்கில் 13 அப்பாவிச் சிங்களவர்கள் படுகொலை செய்யப்பட்டமைக்கு தமிழீழ விடுதலைப் புலிகள் கண்டனம் தெரிவித்துள்ளனர். இச்சம்பவம் தொடர்பாக புலிகள் மீது குற்றம் சாட்டி சர்வதேச செய்தி நிறுவனம் செய்தி வெளியிட்டுள்ளமை அதிர்ச்சியளிப்பதாகவும் புலிகள் குறிப்பிட்டிருக்கின்றார்கள். இந்தச் சம்பவம் தொடர்பாக விடுதலைப் புலிகளின் சமாதானச் செயலகம்

(10ஆம் பக்கம் பார்க்க)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நூல் வெளியீடு

திருமதி மாதேவிப்பிள்ளை கதிர்காமத்தம்பி எழுதிய 'திருவருட் பயன் வசன ரூபம்' நூல் வெளியீட்டுவிழா நாளைமறுதினம் காலை 9.30 மணிக்கு தொண்டைமானாறு சந்நிதியான் ஆச்சிரமத்தில் நடைபெறவுள்ளது.

சந்நிதியான் ஆச்சிரமத்தின் வெளியீடாக வெளிவரவுள்ள இந்த நூலாக்கத்தில் சிவக்கவி மாணி கவிஞர் ஆ.கதிர்காமத்தம்பி உதவி ஆக்குநராகப் பணியாற்றியுள்ளார். சைவப் புலவர் சு.செல்லத்துரை, யாழ். பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த திருமதி நாச்சியார் செல்வநாயகம், திருமதி கலைவாணி இராமநாதன் ஆகியோர் மலர் வெளியீட்டில் கலந்து கொள்வர். பேரவைத் தலைவர் எஸ். அருள்லிங்கம் தலைமையில் நிகழ்வுகள் நடைபெறும்.(173)

## வந்தது....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அதேபோல் இந்த நாடுகளில் விடுதலைப் புலிகளுக்கு ஆதரவாகச் செயற்படும் அமைப்புகள் மற்றும் நபர்கள் தண்டனைக்குள்ளாகும் நிலைமையும் உள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. ஏற்கனவே, வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் கொல்லப்பட்டதையடுத்து ஐரோப்பிய ஒன்றிய நாடுகளில் விடுதலைப் புலிகள் இயக்கத்திற்கு பயணத்தடை விதிக்கப்பட்டிருந்தது.

இதன் பின்னர் -

ஜெனீவாப் பேச்சுகளில் புலிகளை பங்கேற்க வைப்பதற்காக, இராஜதந்திர ரீதியில் பாரிய வாதப் பிரதிவாதங்களுக்குப் பின்னர் நேற்றுமுன்தினம் மேற்படி தடை விதிக்கப்பட்டதாக விடயமறிந்த வட்டாரங்கள் கூறின.

இவ்வாறான தடைவிதிப்பானது இலங்கை அமைதி முயற்சிகளில் தங்களது நடுநிலையான பணிக்கு பாதிப்பை ஏற்படுத்துமென்று நோர்வே அனுசரணையாளர்கள் ஏற்கனவே தெரிவித்திருந்தமை இங்கு குறிப்பிடத்தக்கது.(க)

## ஐரோப்பிய ஒன்றிய....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முன்னெடுக்கப்படும் தேச சுதந்திரப் போராட்டத்துக்கும் மேலும் தீவிரமான ஆதரவையும், பொருளாதார உதவிகளையும் அள்ளி வழங்கி, இத்தடையின் உள்ளார்ந்த நோக்கத்தை முறியடிப்பார்கள் என்பது திண்ணம்.

எதிரியின் விசமத்தனமான பரப்புரைகளால் குழப்பமடைந்து எமது விடுதலைப் போராட்டத்தின் தர்மத்தையும், நியாயத்தையும் புரியத் தவறியமையால் ஐரோப்பிய ஒன்றியம் இந்தத் தவறான முடிவை எடுத்திருக்கின்றது.

இதனால் சமாதான வழியிலான முயற்சிகளுக்குப் பங்கம் ஏற்படக் கூடும். ஆனால், எமது சுதந்திரப் போராட்டம் அதன் இலட்சியப் பாதையில் எந்த சவால்களையும் எதிர்கொண்டு முன்னேறிச் செல்லும் என்பது உறுதி.

எமது நீண்ட - நெருக்கடியான - போராட்ட வரலாற்றுப் பாதையில் எத்தனையோ சோதனைகளுக்கு முகம் கொடுத்து வெற்றி கண்ட எமது விடுதலை இயக்கம் இந்த இராஜரீக அழுத்தத்தினால் ஆட்டம் கண்டுவிடாது.

தமிழீழ விடுதலைப் புலிகளைப் பயங்கரவாதப் பட்டியலில் சேர்ப்பது தொடர்பாக ஐரோப்பிய நாடாளுமன்றத்தில் ஏகமனதான தீர்மானம் நிறைவேற்றப்பட்ட பின்னர், புலிகளுக்கு எதிரான தடை வரும் என்பது எதிர்பார்க்கப்பட்டது தான். ஐரோப்பிய அமைச்சரவைக் கவுன்ஸிலினால் அது அங்கீகரிக்கப்பட்டதை அடுத்து அந்தத் தடை நேற்று (திங்கள்) முதல் நடைமுறைக்கு வந்திருக்கிறது. அவ்வளவே.

ஆகவே, இந்த அறிவிப்புத் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தை ஆச்சரியத்துக்குள் ஆழ்த்தவில்லை. ஆனாலும் அது கவலையளிப்பது; அதிருப்தி தருவதுதான்.

தவிர்க்கமுடியாத இந்தத் தடை எதிர்பார்க்கப்பட்ட சமயத்திலேயே, ஐரோப்பிய ஒன்றியத்தின் தண்டனை விதிக்கும் வகையிலான இந்த நடவடிக்கை ஏற்படுத்தக்கூடிய எதிர்மறைவான விளைவுகள் குறித்து நான் கருத்துக் கூறிவந்துள்ளேன்.

ஐரோப்பிய ஒன்றியத் தடை நீதியற்றது; பொருத்தமற்ற சமயத்தில் வந்திருக்கின்றது என்பதே எமது கருத்து. அத்தோடு அது ஒரு தலைப்பட்சமானது; இலங்கை அரசு சார்பானது.

விடுதலைப்புலிகள் யுத்த நிறுத்தத்திலிருந்தோ, அமைதி முயற்சிகளிலிருந்தோ விலகி ஒதுங்காமல் இருக்கும் சமயத்தில் -

தொடரும் வன்முறைகளுக்காக இருதரப்பின்மீதுமே குற்றம் சுமத்தப்படும் சூழ்நிலையில்-

ஒரு பக்கத்துக்கு மட்டும் எதிராக - புலிகள் மீது மாத்திரம் தண்டனை விதிக்கும் வகையில் - இத்தகைய நடவடிக்கையை எடுப்பது இராஜதந்திர ரீதியில் தவறானது; பொருத்தமற்ற நேரத்தில் எடுக்கும் முடிவாகும்.

தமிழ் மக்களின் உயிர்களையும் உடைமைகளையும் பாதுகாக்க வேண்டிய தனது பொறுப்புகளிலிருந்து இலங்கை அரசு தவறி, தவறிழைத்து வருகையில், மற்றைய தரப்பை மட்டும் தண்டிக்கும் வகையிலான இந்தத் தீர்மானம் இவ்வளவு அவசரப்பட்டு ஏன் எடுக்கப்பட்டது என்பதை என்னால் புரிந்து கொள்ளமுடியவில்லை.

ஐரோப்பிய ஒன்றியத் தடை அமைதி முயற்சிகளில் தமிழ்ப் புலிகளுக்கு உள்ள சமதரப்பு என்ற அந்தஸ்தைப் பாதிக்கும். இது, அந்த முயற்சிகளில் தமிழர் தரப்பின் பேரம் பேசும் வலுவை அடியோடு குறைக்கும்.

அதேசமயம், இலங்கை அரசின் கைகளை ஐரோப்பிய ஒன்றியத்தின் இந்தத் தடை மேலும் வலுப்படுத்தும். ஐரோப்பிய ஒன்றியத் தடை, ராஜபக்ஷ அரசு தமிழர்களுக்கு எதிராக தீவிர - இராணுவ நடவடிக்கை - நிலைப்பாட்டைக் கைக்கொள்ள ஊக்குவிக்கும். அது இறுதியில் மோசமான இனப்போர் வெடிக்க வழி சமைக்கும் - என்றார் பாலசிங்கம்.

எதிர்வரும் 8, 9ஆம் திகதிகளில் ஒஸ்லோவில் நடத்துவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ள கூட்டத்தில் புலிகள் பங்குபற்றுவதை இந்தத் தடை பாதிக்குமா என்று கேட்டதற்கு, பாலா கூறிய பதில் வருமாறு:-

தடை வந்தாலும் ஒஸ்லோ பேச்சுகளில் புலிகள் இயக்கம் பங்குபற்றும் என்றே நான் நினைக்கின்றேன்.

இலங்கை யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் பாதுகாப்பு, பந்தோபஸ்து, செயற்பாடு மற்றும் அமைதி பேணும் நடவடிக்கையின் பல்வேறு அம்சங்கள் பற்றி ஆராய்வதற்கான கூட்டமே ஒஸ்லோ சந்திப்பு என்பதால் ஜெனீவாப் பேச்சிலிருந்து அது முற்றிலும் வேறுபட்டது.

கண்காணிப்புக் குழுவில் சுவீடன், டென்மார்க், பின்லாந்து நாட்டு அங்கத்தவர்களின் பங்கு, பணி பற்றிய விடயமும் ஒஸ்லோ சந்திப்பில் ஆராயப்படவுள்ளது.

அத்தோடு நோர்வே அரசின் சார்பில் அமைச்சர் எரிக் சொல்ஹெய்மினால் கூட்டப்பட்டிருக்கும் கூட்டமே இது.

இந்தக்கூட்டம் தொடர்பான நோர்வேயின் அழைப்புக்கு இலங்கை அரசு இன்னும் பதிலளிக்கவில்லை. அத்தோடு கட்டுநாயக்கா சர்வதேச விமான நிலையம் ஊடாக இந்தக் கூட்டத்துக்குப் புலிகளின் பிரதிநிதிகள் செல்வதற்குரிய பாதுகாப்பான பயணத்துக்கும் இலங்கை அரசு இன்னும் உறுதி தரவில்லை.

தற்போதைய நிலையில் நான் லண்டனில் மருத்துவ சிகிச்சைக்கு உள்ளாகிவருவதால் ஒஸ்லோ கூட்டத்துக்குச் செல்லக்கூடிய உடல் நிலையில் நான் இல்லை. - என்றார் பாலசிங்கம். (உ)

## ஆயுதக் குழுக்களின்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சர்வதேச அபிவிருத்தி அமைச்சரும் இலங்கையில் நோர்வேயின் அனுசரணைப் பணிக்குப் பொறுப்பானவருமான எரிக் சொல்ஹெய்ம், ஐரோப்பிய ஒன்றியத்தின் சார்பில் ஐரோப்பிய ஒன்றியத்தின் வெளிவிவகாரங்களுக்குப் பொறுப்பான ஆணைக்குழுவின் பிரதிப் பணிப்பாளர் நாயகம் ஹேவ் ஜெனஜீன் ஆகியோர் பங்குகொண்டனர்.

நேற்றைய கூட்டத்தின் பின்னர் இணைத் தலைமை நாடுகள் விடுத்த கூட்டறிக்கையின் முழு விவரம் வருமாறு:-

போரின் விளிம்பில் இலங்கை உள்ள நிலையில் இணைத் தலைமைகளின் இந்தச் சந்திப்பு டோக்கியோவில் நடைபெற்றது.

வன்முறைக்குள் மீண்டும் நாடு வீழ்வதைத் தடுக்கும் நிலமையில் இலங்கை அரசும், புலிகளும் இல்லை என்பதுபோல தென்படுகின்ற இச்சூழலில் -

ஐரோப்பிய யூனியன், ஜப்பான், அமெரிக்கா, நோர்வே ஆகிய இணைத் தலைமை நாடுகள் இலங்கை நெருக்கடி குறித்துக் கவனித்து பயனுள்ள முறையில் அதற்கு உதவ முடியுமா என்பதைக் கண்டறிவதற்காக -

இலங்கையின் மீள்கட்டமைப்பு, அபிவிருத்திக்கான டோக்கியோ மூல மாநாட்டின் மூன்று ஆண்டுகளின் பின்னர் -

ஜப்பான் இந்த டோக்கியோ சந்திப்பை ஏற்பாடு செய்திருக்கின்றது.

சீர்கெட்டு வரும் நிலைமையைத் தலைகீழாக மாற்றி நாட்டை மீண்டும் சமாதானப் பாதையில் தூக்கி நிறுத்துவதற்கு உடனடி நடவடிக்கைகளை எடுக்குமாறு இரு தரப்புகளையும் இணைத் தலைமைகள் கோருகின்றன.

### புலிகளுக்கு

விடுதலைப் புலிகள் அமைப்பு பேச்சு நடவடிக்கைகளுக்குக் கட்டாயம் மீளத் திரும்ப வேண்டும். பயங்கரவாதத்தையும், வன்முறைகளையும்கைவிடுவதாக அது அறிவிக்க வேண்டும். ஐக்கிய இலங்கைக்குள் தேவைப்படுகின்ற அரசியல் தீர்வு ஒன்றைக் காண்பதற்கான அரசியல் இணக்கப்பாட்டுக்கு தனது இசைவை அது வெளிப்படுத்த வேண்டும். அத்தகைய தீர்வு இலங்கையின் சகல மக்களினதும் ஜனநாயக உரிமைகளை உள்ளடக்கியதாக இருக்க வேண்டும். அத்தகைய நடவடிக்கைகளுக்கு சர்வதேச சமூகம் சாதகமான பிரதிபலிப்பைக் காட்டும்; அப்படிச் செய்யத் தவறுவது விடுதலைப் புலிகளை மேலும் மோசமாகத் தனிமைப்படுத்தும்.

### அரசுக்கு

தமிழ் மக்களின் சட்டபூர்வமான ஆதங்கங்களைக் கவனத்தில் எடுப்பதை அரசும் வெளிப்படுத்த வேண்டும். தனது கட்டுப்பாட்டுப் பிரதேசத்தில் நிலைகொண்டுள்ள குழுக்கள் வன்செயல்கள் மற்றும் பயங்கரவாதச் செயல்களில் ஈடுபடுவதை உடனடியாக அரசு தடுக்க வேண்டும். நாடு முழுவதும் வாழும் தமிழர்களின் உரிமைகளும், பாதுகாப்பும் பேணப்படுவதையும் அவற்றை மீறுவோர் மீது உரிய சட்ட நடவடிக்கை எடுக்கப்படுவதையும் அரசு உறுதிப்படுத்த வேண்டும்.

முஸ்லிம்கள் உட்பட இலங்கை மக்கள் அனைவரினதும் உரிமைகளை மேம்படுத்தி நிலைநாட்டும் புதிய ஆட்சி முறை ஒன்றைக் கொண்டு வருவதற்கான பெரிய அரசியல் மாற்றத்துக்குத் தான் தயார் என்பதை அரசு வெளிப்படுத்த வேண்டும். அத்தகைய நடவடிக்கைகளை சர்வதேச சமூகம் ஆதரிக்கும். அத்தகையை நடவடிக்கைகளை எடுக்கத் தவறுவது சர்வதேச ஆதரவை இழக்கச் செய்யும்.

பெப்ரவரி 2006 இல் ஜெனீவா சந்திப்பில் தெரிவிக்கப்பட்ட உறுதிப்பாடுகள் உட்பட நிறைவேற்றத் தவறிய பல பொறுப்புகள் இரு தரப்புக்கும் உள்ளன என்பதை இணைத் தலைமைகள் அறிந்துள்ளன. பல்வேறு பயங்கரவாதத் தாக்குதல்களுக்கு விடுதலைப் புலிகள் பொறுப்பு. கருணா மற்றும் ஈ.பி.டி.பியின் வன்முறை மூலங்கள் ஆகியவை உட்பட ஆயுதம் தாங்கிய குழுக்களின் தாக்குதல்களைத் தடுக்க அரசும் தவறிவிட்டது.

பிணக்கில் சம்பந்தப்பட்ட தரப்புகள் மீது வன்முறைகள் என்ற நிலையைத் தாண்டி, அவை அப்பாவிக் குடிமக்களின் உயிர்களைக் குடித்து அவர்களின் வாழ்வைச் சீரழிக்கத்தொடங்கிவிட்டன. இதுசட்டம், ஒழுங்கை செயலிழக்கச் செய்து பாதிக்கப்பட்ட குடிமக்களைப் பெரும் பயங்கரத்துக்குள் மூழ்கடித்திருக்கின்றது. மனித உரிமைத் துஷ்பிரயோகங்கள் ஐ.நாவினாலும், ஏனையோராலும் அண்மைக் காலத்தில் மதிப்பீடு செய்யப்பட்டிருக்கின்றன. மனித உரிமைகளை மதிக்கும்படியும், மனித உரிமைத் துஷ்பிரயோகத்துக்கு எதிராகச் செயற்படும்படியும் சகல தரப்புகளையும் இணைத் தலைமைகள் கோருகின்றன.

இந்த நிலைமை தொடர்ந்து தாங்கக்கூடியதல்ல. இரண்டு பொறுப்புத் தரப்புகளும் வன்முறைகளை நிறுத்தி, தங்கள் வேறுபாட்டை அமைதியான பேச்சு மூலம் தீர்த்துக் கொள்ள முன்வராவிட்டால் நாடு தொடர்ந்து பெரும் பிணக்குக்குள் மேலும் மூழ்குவது தவிர்க்க முடியாததாகும்.

நிலைமை ஆழ்ந்த கவலைக்குரியதாக இருந்தாலும் அமைதித் தீர்வுக்கான மூலங்கள் இன்னும் காத்திருக்கின்றன என்ற முடிவுக்கே இணைத் தலைமைகள் வந்துள்ளன. பெரும்பான்மையான இலங்கை மக்கள் இன்னும் சமாதானத்தையே வேண்டுகின்றனர்.

தற்போது நோர்வே அனுசரணையுடன் முன்னெடுக்கப்படும் அமைதி முயற்சிகளுக்கு ஆதரவு வழங்கி, அமைதி நிலையை மேம்படுத்துவதற்குத் தேவையான - இயன்ற - அனைத்து உதவிகளையும் இலங்கைக்கு வழங்குவதற்கான தமது உறுதிப்பாட்டை இணைத் தலைமைகள் அனைத்தும் மீளத் தெரியப்படுத்துகின்றன. ஏனைய நாடுகளும், நிறுவனங்களும் இணைத் தலைமையின் இந்த நிலைப்பாட்டையே கொண்டிருப்பதோடு இது விடயத்தில் இணைத் தலைமைகளை ஆதரிக்கின்றன.

இந்தவகையில், மூன்ற வருடங்களுக்கு முன்னர் நடைபெற்ற டோக்கியோ மாநாட்டில் பங்கு பற்றிய நாடுகள் வகுத்த விடயங்களின் அடிப்படையில், உரிய வேலைகளின் திறமைப்பாட்டை மேலும் மேம்படுத்துவதற்குரிய பொறுப்புகளையும், இலக்குகளையும் ஏனைய நாடுகளின் குழுக்களிடம் ஒதுக்கு செய்வதற்கான [illegible] குறித்து இணைத் தலைமைகள் ஆராயவுள்ளன.

இலங்கையில் உள்ள தமிழ் மக்களுக்கும், முஸ்லிம் மக்களுக்கும் நியாயமான ஆதங்கங்கள் இருக்கின்றன. இவை முழுமையான அளவில் கவனிக்கப்படவில்லை. இந்த ஆதங்கங்களை நீக்குவதற்கு உருப்படியான கொள்கைகளை ஏற்படுத்தும்படியும் சமூகங்களிடையே பரஸ்பர நம்பிக்கையைக் கட்டியெழுப்பும்படியும் இலங்கை அரசாங்கத்தை இணைத்தலைமைகள் ஊக்குவிக்கும். இதனை அமுல்செய்யும் பணியில் இணைத்தலைமைகளும், சர்வதேச சமூகமும் இலங்கை அரசாங்கத்துக்கு ஆதரவு வழங்கும்.

சர்வதேச சமூகம் இலங்கையில் சமாதானத்துக்கு தனது ஆதரவைத் தெரிவிக்க முடியும். ஆனால், சமாதானத்தைக் கொண்டு வர முடியாது என்பது டோக்கியோ மாநாடு நடைபெற்ற பின்பு கடந்த மூன்று வருடங்களாக இடம்பெற்ற நிகழ்வுகள் எடுத்துக் காட்டுகின்றன. இலங்கை மக்களால் மட்டுமே இலங்கையில் சமாதானத்தைக் கொண்டுவர முடியும்.

பிரச்சினையில் சம்பந்தப்பட்ட தரப்புகள் சமாதானத்தை ஏற்படுத்து வதில் நேர்மையுடனும் உறுதியுடனும் செயற்பட்டால் மாத்திரமே இணைத் தலைமைகளின் பங்களிப்பு அர்த்தமுள்ளதாக இருக்கும்.

2002- 2003 காலப் பகுதியில் நடைபெற்ற வெற்றிகரமான சமாதானப் பேச்சுகளில் இரு தரப்பினரும் எதிர்காலப் பேச்சுகள் தொடர்பான அடிப்படைக் கொள்கைகளை ஏற்றுக் கொண்டிருந்தனர். இரு தரப்பினரும் யுத்த நிறுத்த ஒப்பந்தம், ஆறு சுற்றுப் பேச்சுகளில் எடுக்கப்பட்ட தீர்மானங்கள், கடந்த பெப்ரவரியில் நடைபெற்ற ஜெனீவாப் பேச்சு ஆகியன தொடர்பான இந்த அடிப்படைக் கொள்கைகளை தொடர்ந்து கடைப்பிடிக்கப்படுவதை மீள உறுதிப்படுத்த வேண்டும்.

இலங்கையின் பிரதேச இறைமை, தமிழ் மக்களினதும் மற்றும் முஸ்லிம் மக்களினதும் பாதுகாப்பு, அபிலாஷைகளை பூர்த்தி செய்தல், சகல சமூகத்தினருக்கும் ஏற்புடைய ஜனநாயக மனித உரிமைகளுக்கு உத்தரவாதம் அளித்தல் ஆகியவை தொடர்பாக இரு தரப்பினரும் ஏற்றுக்கொள்ளும் தீர்மானங்களுக்கு இணைத் தலைமைகள் ஆதரவு வழங்கும்.

இரு தரப்பினரையும் பேச்சு மேசைக்குக் கொண்டு செல்வதற்காக நோர்வே பல யோசனைகளை வைத்துள்ளது. அவை விரைவில் வெளியிடப்படும். இணைத் தலைமை இந்த யோசனைகளை ஏற்றுக் கொண்டுள்ளன.

இலங்கை இனப்பிரச்சினைக்கு யுத்தம் மூலம் தீர்வு கண்டுவிட முடியாது. யுத்தம் மூலம் எவரும் வெற்றி பெற முடியாது என்பதை இலங்கையின் கடந்த கால வரலாறு எடுத்துக் காட்டுகிறது. யுத்தத்தால் பொது மக்கள்தான் பாதிக்கப்படுகிறார்கள். தீர்வு ஏற்படுவதற்கு அரசியல் பற்றுறுதி, இணக்கப்பாடு காணும் மனநிலை, பொறுப்புத்தன்மை ஆகியவை இலங்கை அரசுக்கும், விடுதலைப்புலிகளுக்கும் தேவை.

சமாதான முயற்சிப் பணியிலும் - நெருக்கடியான தற்போதைய வேளையில் போர் நிறுத்தக் கண்காணிப்புப் பணியிலும் - ஈடுபட்டுவரும் அனுசரணை நாடான நோர்வேயின் முக்கிய பங்களிப்புக்கு இணைத் தலைமைகள் தமது ஆதரவை மீண்டும் தெரிவிக்கின்றன. அதேசமயம், யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் பணிகளை எப்படிப் பலப்படுத்த முடியும் என்பது குறித்து பரிசீலனை செய்யவேண்டியதும் அவசியம் ஆகும்.

டோக்கியோவில் நடைபெற்ற உதவி வழங்கும் நாடுகள் மாநாட்டில் ஏற்றுக் கொள்ளப்பட்டதன் அடிப் படையில் கடந்த மூன்று வருடங்களில் உதவியாகவும், ஆழிப்பேரலை நிதியாகவும் 340 கோடி டொலர் பணம் வழங்கப்பட்டிருப்பது இணைத் தலைமைகள் கவனத்தில் உள்ளது. இந்த நிதியில் இலங்கையின் வடக்கு - கிழக்குப் பகுதிகளில் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசம் உள்ளடக்கமாக 20 சதவீதத்துக்கு மேற்பட்ட நிதி ஒதுக்கப்பட்டது. இலங்கை மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தும் நோக்கத்துடனேயே இந்த உதவி ஒதுக்கப்பட்டது.

யுத்த நிறுத்த ஒப்பந்தத்தை இரு தரப்பினரும் சரியான முறையில் கடைப்பிடிப்பார்கள் என்பதைத் தமது நடவடிக்கைகள் மூலம் நிரூபிப்பார்களானால் மேற்கண்ட நிதி உதவிகளுக்கு அப்பால் சுகாதார மற்றும் கல்வி அபிவிருத்தி போன்ற நம்பிக்கையைக் கட்டியெழுப்பக்கூடிய துறைகளுக்கும் உதவி வழங்கப்படும். அவசர தேவைகளுக்கான நிதியும் வழங்கப்படும்.

இலங்கையில் சமாதானத்தை ஏற்படுத்துவதற்கு ஐக்கிய நாடுகள் சபை, செஞ்சிலுவை, அரசசார்பற்ற தொண்டு நிறுவனங்கள் உட்பட்ட சிவில் அமைப்புகள் ஆகியவற்றின் சாதகமான பங்களிப்புகள் மிகவும் அவசியமானவை என்பதை இணைத் தலைமைகள் மீண்டும் வலியுறுத்துகின்றன.

எனினும், இவற்றின் பணிகள் சம்பந்தமான விமர்சனங்கள் இவற்றின் மீதான தாக்குதல்கள் அதிகரித்து வருவதை இணைத் தலைமை கண்டிக்கிறது. இவற்றின் பாதுகாப்புக்கு இலங்கை அரசாங்கமும் விடு தலைப் புலிகளும் உறுதி அளிக்க வேண்டும். ஐ. நா. மற்றும் கண்காணிப்புக் குழு போன்ற மனித உரிமைகள் கண்காணிப்பில் ஈடுபடும் ஏஜென்சிகளுடன் இணைத்தலைமைகள் நெருக்கமான அவதானிப்புகளை வைத்துக்கொள்ளும்.

மூன்று வருடங்களுக்கு முன்னர் நடைபெற்ற டோக்கியோ மா நாட்டில் இலங்கையின் சமாதான முயற்சிகளுக்கு சர்வதேச சமூகத்தின் ஆதரவு கோரப்பட்டது.

இவற்றில் முக்கியமானவை நோர்வேயின் அனுசரணைப்பணி, யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் பணி, இணைத் தலைமைகள், உதவும் நாடுகளின் நிதியுதவி.

மூன்று வருடங்களுக்கு முன்னர் டோக்கியோ மாநாட்டில் ஏற்றுக் கொள்ளப்பட்ட விடயங்களின் அடிப்படையிலேயே சர்வதேச சமூகம் இன்றும் தனது ஆதரவை வழங்க உறுதி கொண்டுள்ளது. அதேநேரம், யுத்தத்தைத் தவிர்க்க வேண்டுமானால் இலங்கை அரசும், புலிகளும் தங்கள் பக்கத்தில் நிறைவேற்ற வேண்டியவற்றை நிறை வேற்ற வேண்டும். - இப்படித் தெரிவிக்கப்பட்டுள்ளது. (உ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
தொலைபேசி, தொலைநகல் - 222 2030, 222 2083, 222 3837

# நம்பிக்கை தகர்ந்தது!

பல தரப்பிலும் கூறப்பட்டபடி தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்துக்கு எதிராகத் தடையை விதிப்பதற்கு ஐரோப்பிய ஒன்றியம் தீர்மானித்து விட்டது.

இலங்கைப் பிரச்சினையில் சம்பந்தப்பட்ட இரு தரப்புகளாலும் - இலங்கை அரசு மற்றும் தமிழர்களால் - வெளிப்படுத்தப்படும் விவாதங்களில் உள்ள நியாயப்பாடுகளை கவனத்தில் எடுக்காமல் ஒரு தலைப்பட்சமாக - அதேநேரம் அவசரப்பட்டு - இந்த முடிவுக்கு ஐரோப்பிய ஒன்றியம் வந்திருப்பதாகவே தமிழர் தரப்பு கருதுகிறது.

தமிழர் தரப்புக்குப் பெரும் கவலையையும் விசனத்தையும் தரும் இந்த நடவடிக்கை தொடர்பாக ஐரோப்பிய ஒன்றியம் தனது நிலைப்பாட்டைத் தெளிவுபடுத்த வேண்டும். அந்தக் கடமையும், பொறுப்பும் அதற்கு உண்டு.

இலங்கைத் தீவில் இலங்கை அரசுக்கும், தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்துக்கும் இடையில் செய்யப்பட்ட போர் நிறுத்த ஒப்பந்தத்திலிருந்து தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் இன்னும் விலகி அதை முறித்துக் கொள்ளவில்லை. இனப்பிரச்சினைக்கு அமைதித் தீர்வு காணும் முயற்சிகளிலிருந்து புலிகள் முற்றாக விலகிக்கொள்ளவுமில்லை. தற்போதைய அரசுடன் ஆரம்பிக்கப்பட்ட ஜெனீவா அமைதிப் பேச்சுகளில் தொடர்ந்து பங்குபற்றமாட்டோம் என்ற முடிவுக்கும் புலிகள் வந்துவிடவில்லை.

சமாதானப் பேச்சுக்கான புறநிலையை உருவாக்கி, முதல் சுற்று ஜெனீவாப் பேச்சில் காணப்பட்ட இணக்கங்களை முழு அளவில் நடைமுறைப்படுத்தி, சமாதான முயற்சிகளை அர்த்தமுள்ளதாக்குங்கள், அப்போதுதான் அமைதி எத் தனங்களைத் தொடர முடியும் என்றுதானே புலிகள் வற்புறுத்தினார்கள்.......?

ஆனால், அமைதிப் பேச்சுக்கான புறச்சூழலைக் குழப்புவதைத் தவிர்த்து, அதற்கு இசைவான சூழ்நிலையை உருவாக்குங்கள் என்று இலங்கை அரசுத் தரப்புக்கு அழுத்தம் போட வேண்டிய ஐரோப்பிய ஒன்றியம் அதை விடுத்து, விடுத்லைப் போராட்ட அமைப்பான புலிகளைத் தடை செய்து - ஒரு பக்கச் சார்பாகச் செயற்பட்டதன் மூலம் நிலைமையை மேலும் மோசமடைய வைத்திருக்கின்றது.

களத்தில் - தமிழர் தாயகத்தில் - வன்முறைகள், உயிர்ப் படுகொலைகள் அதிகரித்துச் செல்கின்றன. இதற்குப் பரஸ்பரம் இரு தரப்புகளின் மீதும் மாறி மாறி குற்றங்கள் சுமத்தப்படுகின்றன. பழிக்குப் பழி என்ற ரீதியில் படுகொலைகள், தாக்குதல்கள் விரிந்து செல்கின்றன. வன்முறைச் சம்பவங்களுக்கு இரு தரப்பு மீதுமே பரவலாகப் பொறுப்புச் சுமத்தப்படுகின்றது.

இந்த வன்முறைகளுக்கு ஒரு புறம் புலிகள் மீது குற்றம் சுமத்தப்படும் அதே வேளையில், அவற்றுக்குச் சூத்திரதாரிகள் அரச புலனாய்வுத் துறையின் வழிகாட்டலில் இயங்கும் ஒட்டுப் படைகளே எனப் புலிகள் குற்றம் சுமத்துகின்றனர். புலிகளின் இந்தக் குற்றச்சாட்டை இலங்கைப் போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழு உட்பட பல சர்வதேச அமைப்புகள் உண்மையானது என ஒப்புக் கொள்கின்றன.

தவறிழைத்து வரும் இலங்கை அரசுத் தரப்பைக் கண்டிக்காமல், தமிழர் தரப்பைக் கண்டிப்பதுபோல ஐரோப்பிய ஒன்றியம் தடைவிதித்திருக்கின்றது. அதனால், அது ஒரு தலைப்பட்சமானதாகின்றது. இலங்கை விவகாரத்தில் நாம் முன்னரே இப்பத்தியில் சுட்டிக் காட்டியிருப்பதுபோல 'ஒரு கண்ணில் வெண்ணெய்யும், மறு கண் ணில் சுண்ணாம்பும்' தடவுவது போன்று பாரபட்சமாக நடந்துகொண்டிருக்கின்றது ஐரோப்பிய ஒன்றியம் என்பதே தமிழர்கள் தரப்பின் ஏகோபித்த கருத்தாகும்.

அமெரிக்க வல்லாதிக்கம் மற்றும் அதன் கூட்டு ஏவல் தரப்பான பிரிட்டன் போன்றவற்றின் அழுத்தம் தரும் இராஜதந்திரத்துக்கு அடி பணிந்து - சுயத்தை விட்டுக் கொடுத்து - ஐரோப்பிய ஒன்றியம் செயற்பட்டிருக்கின்றது.

ஈழத் தமிழ் மக்களின் தேசியப் போராட்டத்தை இழிவுபடுத்தும் விதத்தில் -

தமிழ் மக்களின் விடுதலைப் போராட்ட சக்தியான தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தை அவமானப்படுத்தும் வகையில் -

அடக்குமுறையில் ஈடுபட்டு, வன்முறைகளைக் கட்டவிழ்த்து விட்டு தமிழர் தரப்பை சிறுமைப்படுத்தும் தென்னிலங்கைச் சிங்களத்தைக் கைகொடுத்துத் தூக்கிவிடும் போக்கில் -

இந்த நடவடிக்கையை முன்னெடுத்திருக்கின்றது ஐரோப்பிய ஒன்றியம்.

தற்போதைய சமாதான முயற்சிகள் இனிமேலும் ஆக்கபூர்வமான திசையில் நகர்வதற்கு இந்த முடிவு உதவப் போவதில்லை.

தவிரவும், தங்களது நியாயமான அபிலாஷைகளை நிறைவு செய்ய வேண்டி, நீதி கேட்டு - ஈழத் தமிழர்கள் நடத்தும் போராட்டத்துக்கு நியாயத் தீர்வு பெற்றுத் தந்து சர்வதேச சமூகம் தங்களுக்கு உதவும் என்ற ஈழத் தமிழரின் எதிர்பார்ப்பை - நம்பிக்கையை - ஐரோப்பிய ஒன்றித்தின் இந்த நடவடிக்கை ஒரேயடியாகத் தகர்த்து விட்டது.

ஒரு தலைப்பட்சமாக - அவசர அவசரமாக முன்னெடுக்கப்பட்ட - நம்பிக்கையைத் தகர்க்கின்ற - இந்த நடவடிக்கையின் விளைவுகள் விபரீதங்களாக அமையலாம். போகப் போகத்தான் அவற்றின் ஆழமும், தாக்கமும் வெளிப்பட்டுப் புரியவரும்.

### நயினை உற்சவ காலத்தில்

# உயிர்காப்புக் கருவிகள் பொருத்தப்பட்ட படகுகளுக்கு மட்டுமே அனுமதி கிட்டும்

## யாழ்.செயலகக் கூட்டத்தில் முடிவு

நல்லூர்,மே31

நயினாதீவு நாகபூஷணி அம்மன் வருடாந்த உற்சவத்தில் உயிர்காக்கும் சாதனங்கள் பொருத்தப்பட்ட படகுகள் மட்டுமே சேவையில் ஈடுபட அனுமதிக்கப்படும்.

- இவ்வாறு யாழ்.செயலக மேலதிக அரசாங்க அதிபர் ஆ.சிவசுவாமி தெரிவித்தார்.

நயினாதீவு நாகபூஷணி அம்மன் ஆலய வருடாந்த திருவிழா தொடர்பான முன்னேற்பாட்டுக் கூட்டம் யாழ். செயலக மாநாட்டு மண்டபத்தில் நேற்று இடம்பெற்றது.

இக்கூட்டத்தில் மேலதிக அரசாங்க அதிபர் ஆ.சிவசுவாமி மேலும் கூறுகையில் -

இந்தியாவிற்கு பயணம் செய்த பயணிகள் படகுகளில் உயிர்காக்கும் சாதனங்கள் இல்லாமையினாலேயே உயிரிழப்புக்கள் நேரிடுகின்றன.

இந்நிலையைத் தவிர்க்க நயினாதீவு வருடாந்த உற்சவ காலங்களில் உயிர் காக்கும் சாதனங்கள் உள்ள படகுகள் மட்டுமே சேவையில் ஈடுபடுத்த அனுமதிக்கப்படும்.

தற்போது குடாநாட்டு நிலைமை சீரற்று இருப்பதனால் இரவு நேர பூஜை வழிபாடுகளை இரவு 8 மணிக்கு முன்னர் முடிப்பது எனவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

ஆலய நிர்வாகத்தினால் மின்சாரத்திற்கு பயன்படுத்தப்படும் ஜெனரேற்றருக்கு தேவையான அளவு டீசல், மண்ணெண்ணை வழங்கப்படும்.

கடந்த காலங்களில் இடம்பெற்றது போன்று வடபிராந்திய பஸ்போக்குவரத்து சேவை இடம்பெறும்.

அல்லைப்பிட்டி, குறிகாட்டுவான் பகுதிகளில் கடற்படையினரால் மேற்கொள்ளப்பட்டு வரும் சோதனை நடவடிக்கை குறித்து கடற்படை அதிகாரியின் கவனத்திற்குக்கொண்டு வந்து இலகுபடுத்துவதற்கான நடவடிக்கை எடுக்கப்படும். இது விடயமாக கடற்படையினருக்கு கடிதம் அனுப்பவிருக்கிறோம்.

கடந்த காலங்களில் வேலணை பிரதேச சபை, தொண்டர் சபை, மின்சார சபை, நீர்வழங்கல் சேவை என்பன வழங்கிய சேவைகளை வழமைபோல் இம்முறையும் வழங்கவிருக்கின்றன.

மேற்படி கூட்டத்தில் நாகபூசணி அம்மன் ஆலய பிரதான நிறைவேற்று அதிகாரி நா.யோகநாதன் கருத்துக் கூறுகையில்:- வருடாந்த ஆலய உற்சவ காலங்களில் எந்தளவிற்கு மக்களின் வருகை அமைந்துள்ளதோ அதற்கேற்ற விதங்களில் ஆலய பூசை நேரங்களில் மாற்றங்களை ஏற்படுத்தலாம்.


மேலும், வேலணை பிரதேச சபையினால் மேற்கொள்ளப்படும் மொத்த சேவையில் 75 வீத கொடுப்பனவுகளை வழங்கலாம்.

மேலும் மின்சாரத்தினை தம்மால் முழுமையாக வழங்க அரசாங்க அதிப டீசல், மண்ணெண்ணை என்பன வழங்க வேண்டும் - என்று தெரிவித்தார்.

மேற்படி கூட்டத்தில் வேலணை பிரதேச செயலர் மு.நந்தகோபன், வேலணை பிரதேச சபை உள்ளூராட்சி உதவியாளர், இலங்கை மின்சாரசபை மின் அத்தியட்சகர், வடபிராந்திய போக்குவரத்து சபை அதிகாரி மற்றும் தொண்டர் சேவை நிறுவன பிரதிநிதிகள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

ஆலய திருவிழா தொடர்பான அடுத்த கூட்டம் எதிர்வரும் 13 ஆம் திகதி மு.ப 10.30 மணிக்கு ஆலய மண்டபத்தில் இடம்பெறும் (111-185)

# திருக்கேதீஸ்வரத்தில் இன்று கொடியேற்றம்



யாழ்ப்பாணம், மே31

கேதீச்சரநாதர் ஆலய பெரும்திருவிழா இன்று புதன்கிழமை அதிகாலை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகித் தொடர்ந்து 10 தினங்கள் நடைபெறவுள்ளது.

எதிர்வரும் 5 ஆம் திகதி மாலை பிச்சாடனர் திருவிழாவும், 6 ஆம் திகதி மாலை திருக்கல்யாணமும், 7 ஆம் திகதி இரவு பக்தோற்சவமும் இடம்பெறும்.

8 ஆம் திகதி வியாழக்கிழமை தேர்த்திருவிழாவும் நடைபெறவுள்ளது. தேர்த்திருவிழா அன்று ஐந்து திருத்தேர்கள் வீதியுலா வரும்.

9 ஆம் திகதி தீர்த்தத் திருவிழா நடைபெறவுள்ளது. அன்று இரவு கொடியிறக்கம் இடம்பெறும். 10 ஆம் திகதி மௌனத் திருவிழாவும் 11 ஆம் திகதி சண்டேசுவரர் திருவிழாவும் இடம்பெறும்.

ஆலயத்திற்குச் செல்லும் பக்தர்களின் நலன் கருதி போக்குவரத்து சேவைகள், அன்னதானம், தாகசாந்தி நிலையங்கள் போன்றவற்றை மகாசிவராத்திரி மடம், திருவாசகமடம், சிவபூமி அன்னதானமடம் ஆகியன இணைந்து செய்துள்ளன.

# நாடுமுழுவதும் உள்ள 14 நிலையங்களில் ஜி.சீ.ஈ.(உயர்தர) பரீட்சை மதிப்பீட்டுப் பணி

அச்சுவேலி, மே31

ஜி.சீ.ஈ.உயர்தர பரீட்சை விடைத்தாள்கள் மதிப்பீடு செய்யும் பணிகள் மூன்று கட்டங்களாக இலங்கை முழுவதும் உள்ள 14 நிலையங்களில் எதிர்வரும் 8 ஆம் திகதி தொடக்கம் அடுத்தமாதம் 12 ஆம் திகதி வரை நடைபெறவுள்ளன.

முதலாம் கட்ட விடைத்தாள் மதிப்பீட்டுப்பணிகள் எதிர்வரும் 8 ஆம் திகதி தொடக்கம் 21 ஆம் திகதி வரை கொழும்பு, காலி, மாத்தறை, குருநாகல், கம்பளை, கண்டி, யாழ்ப்பாணம், களுத்துறை, கேகாலை, குளியாப்பிட்டியா, அனுராதபுரம், பதுளை, இரத்தினபுரி, மட்டக்களப்பு ஆகிய 14 இடங்களிலும் நடைபெறும்.

2 ஆம் கட்ட மதிப்பீட்டுப் பணிகள் எதிர்வரும் 15 ஆம் திகதி தொடக்கம் 28 ஆம் திகதி வரை கொழும்பு, கண்டி, மாத்தறை, காலி, களுத்துறை,பதுளை, இரத்தினபுரி ஆகிய ஏழு நிலையங்களில் நடைபெறும்.

3 ஆம் கட்ட மதிப்பீட்டுப் பணிகள் எதிர்வரும் 26 ஆம் திகதி தொடக்கம் அடுத்தமாதம் 12ஆம் திகதி வரை கொழும்பு, யாழ்ப்பாணம், காலி, மாத்தறை, குருநாகல், கண்டி, மட்டக்களப்பு ஆகிய 7 நிலையங்களில் நடைபெறும்.

தமிழ்மொழி மூலமான விடைத்தாள் மதிப்பீட்டுப் பணிகள் நடைபெறுவதற்கு ஆறு நிலையங்கள் நிறுவப்பட்டுள்ளன.

குறிப்பிடப்பட்ட கால அட்டவணையின் பிரகாரம் விடைத்தாள் மதிப்பீட்டு பணிகள் நடைபெறுவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருப்பதாகவும் விடைத்தாள் பணியில் ஈடுபடுபவர்களுக்கான நியமனக் கடிதங்கள் உரிய காலப் பகுதியில் அனுப்பிவைக்கப்படவிருப்பதாகவும் பிரதிப்பரீட்சை ஆணையாளர் ஆ.சிவலிங்கம் தெரிவித்தார். (11)

# தமிழர் ஆசிரியர் சங்க செயலராக மகாசிவம் பணியாற்ற அனுமதி

இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் பொதுச் செயலாளராக தொடர்ந்து கடமையாற்றுவதற்கு த.மகாசிவத்திற்கு சங்கத்தின் செயற்குழு அனுமதி வழங்கியுள்ளது.

இலங்கைத்தமிழர் ஆசிரியர் சங்கத்தின் செயற்குழுக்கூட்டம் திருகோணமலை விக்கினேஸ்வராக் கல்லூரியில் தலைவர் நா.இராசநாதன் தலைமையில் கடந்த சனிக்கிழமை நடைபெற்றது.

பொதுச்செயலாளர் பதவி தொடர்பாக நீண்ட நேரம் நடைபெற்ற கருத்து பரிமாறல்களை அடுத்து. ''சங்கத்தின் அடுத்த வருடாந்தப் பொதுக்கூட்டம் வரை தொடர்ந்து த.மகாசிவம் சங்கத்தின் பொதுச் செயலாளராகக் கடமையாற்ற அனுமதிப்பது'' என தீர்மானிக்கப்பட்டுள்ளது.

27 வருடங்கள் தொடர்ந்து பொதுச் செயலாளராக கடமையாற்றிய மகாசிவம் மே 9 ஆம் திகதி முதல் சேவையில் இருந்து ஓய்வுபெற்று ஒப்பந்த அடிப்படையில் மாகாணக் கல்வி அமைச்சில் கடமையாற்றுவது குறிப்பிடத்தக்கது. (11)

# வடமராட்சியில் மூன்று கிராமங்களில் படையினரின் வைத்திய சிகிச்சை

யாழ்ப்பாணம்,மே31

யாழ்ப்பாணத்தில் நிலைகொண்டுள்ள 55ஆவது சேனையகத்தின் கீழ் 551ஆவது படையணிக்குட்பட்ட படைப்பிரிவின் இராணுவ வைத்திய குழுவினர் பொற்பதி, குடத்தனை, நடுக்குடத்தனை ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்த மக்களுக்கான வைத்திய சேவைகளை அண்மையில் வழங்கி னர்.

பலாலி இராணுவ முகாம் யாழ் பாதுகாப்பு நடவடிக்கை தலைமையகம் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

மேற்படி கிராமங்களில் வசிக்கும் மக்கள் வறுமைக் கோட்டிற்கு உட்பட்டவர்கள். இப்பகுதி சிறுவர்கள் சளி, பல் நோய், போசாக்கின்மை, நோய்க்கிருமிகள் தாக்கம் என்பவற்றால் பாதிக்கப்பட்டிருந்தனர்.

இதனை நிவர்த்தி செய்யும் முகமாக, பொற்பதி ஆரம்ப பிரிவு பாடசாலையிலும் சென்.மைக்கல் தேவாலயத்திலும் வைத்திய சேவை நடத்தப்பட்டது. இதில் 295 பேர் பயனடைந்தனர்.

சிறுவர்களுக்கு, ஊட்டச்சத்துள்ள மருந்துப் பொருள்கள், விளையாட்டுப் பொருள்கள் என்பனவும் வழங்கப்பட்டன.

யாழ். பாதுகாப்பு நடவடிக்கை தலைமையக தளபதி மேஜர் ஜெனரல் பீ .ஏ. சந்திரசிறியின் ஆலோசனை மற்றும் வழிகாட்டலின் கீழ் தேவையான வைத்தியர் குழுவினால் இந்தச் சேவை வழங்கப்பட்டது. இத்தகைய சேவைகளை கஷ்டப் பிரதேசங்களில் வசிக்கும் மக்களுக்காக இரு மாதங்களுக்கு ஒரு தடவை நடத்தவும் ஆலோசனை பெறப்பட்டுள்ளது - என்றுள்ளது. (204)

### நாளை

வைகாசி 18
வியாழக்கிழமை
01.05.2006
திதி : பஞ்சமி
பிற்பகல் : 12.39
நட்சத்திரம் : பூசம்
பிற்பகல் : 12.38
சுபநேரம் : 07.22 - 08.52
ராகுகாலம் : 01.22 - 02.52

### உதயவாக்கு

எதிர்காலத்தை எண்ணி அஞ்சாதவனே நிகழ்காலத்தை நுகரலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரங்கள்

## நாய்க்குட்டிகள் விற்பனைக்கு

பூச்சிநீக்கிய பொமனேரியன் நாய்க் குட்டிகள் விற்பனைக்குண்டு. தொடர்பு: திரு.சி.குமாரசாமி, 196,நாவலர் வீதி, யாழ்ப்பாணம். (50674)

45 நாள் நிரம்பிய பூச்சி நீக்கிய அழகான பொமனேரியன் நாய்க்குட்டிகள் விற்பனைக்குண்டு. தொடர்பு: A.G. செல்வம் 107, டேவிற் வீதி, யாழ்ப்பாணம் . (50662)

## இறைச்சிக்கோழி தேவை

புறொயிலர் இறைச்சிக்கோழிகள் கொள்வனவு செய்யப்படும். மற்றும் தரமான கோழி எரு விற்பனைக்குண்டு. வீனஸ்பாம், பலாலி வீதி, திருநெல்வேலி (A.G. A.Office முன்பாக நல்லூர்) T.P.: 021 4590484. (50675)

## கோழிக்குஞ்சு விநியோகம்

இரண்டு முறை தடுப்பு மருந்து போடப்பட்ட No.1 Original Prima Broiler குஞ்சுகள், பேட்டுக் குஞ்சுகள் 05.06.2006 திங்கட்கிழமை பிற்பகல் விநியோகிக்கப்படும். எமது பருத்தித்துறை - நெல்லியடிக் கிளைகளிலும், சுட்டிபாம் வட்டுக்கோட்டை, சந்நிதி பாம் - தொண்டைமானாறு, ஐங்கரன் களஞ்சியம், திருநெல்வேலி, முருகன் - சாவகச்சேரி, நல்லூர் பாம் சென்ரர் இல.19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர். (சி-49444)

தரமான பகிரா புறோயிலர் குஞ்சுகள் 31-05-2006 மாலை விநியோகிக்கப்படும். ராஜீவ்- ஆனைக்கோட்டைச் சந்தி, தாரகை- ஸ்ரான்லிறோட், P.ரவி- சாவகச்சேரி, றாஜீவ் கால்நடைத் தீவன விற்பனை நிலையம்- மாதகல் வீதி, பண்டத்தரிப்பு.T.P.: 2222867, 2223529 (50631)

## தவறிவிட்டது

சண்முகலிங்கம் இரத்தினலிங்கம் என்பவருடைய தேசிய அடையாள அட்டை (652271464V), விசேட அடையாள அட்டை (0906003923) என்பன சுன்னாகம் சிவன்கோயிலடியில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் நியூசோதி நகைத் தொழிலகம், சுன்னாகம் பஸ் நிலையம் முன்பாக, எனும் முகவரியில் ஒப்படைத்துதவவும். (50670)

திருமண நிகழ்வு பதிவு செய்யப்பட்ட DVD இரண்டு உடுவில் டச்சுவீதிக்கும் குளப்பிட்டி சந்திக்குமிடையில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் ச.தனபாலசிங்கம், இணுவில் பேப்பர் கடையில் ஒப்படைத்துதவவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும். (50687)

## மணமகள் தேவை

யாழ்.இந்து கௌரவ குடும்பம், 32 வயது திருவாதிரை கிரகபாவம் - 10 பயிற்றப்பட்ட ஆசிரியருக்கு பொருத்தமான மணமகள் தேவை. முதல் கடிதத்திலேயே சகல விவரங்களுடன் தொடர்பு கொள்ளவும். தொடர்பு: விளம்பர இல.2876,மே/பா உதயன்.(50668)

## சிக்கனக் கடனுதவி சங்கக் கூட்டம்

யாழ்ப்பாணம், மே.31

பளை பேராலை சிக்கன கடனுதவி வழங்கும் கூட்டுறவுச் சங்கப் பொதுக்கூட்டம் நாளை வியாழக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு சங்க மண்டபத்தில் நடைபெற வுள்ளது.

இக்கூட்டத்தில் சேமத்திற்கு வட்டி வழங்கல், கடனுக்கு வட்டி அறவிடல், கடனை அறவிடுதல் போன்ற விடயங்கள் தொடர்பாக ஆராயப்படவுள்ளதால் அங்கத்தவர்கள் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது.

## COMPUTER EXPRESS
### Institute of Information Technology

இல.15, சிறாம்பியடி வீதி,யாழ்ப்பாணம்.
021-222 8250,0777 222422

முதன்முறையாக தமிழ்மொழி விளக்கத்துடன் ஒருவாரகால முழுநேர உள்நாட்டு, வெளிநாட்டு வேலைவாய்ப்புக்களைப்பெற, சுயதொழில் ஆரம்பிப்பதற்கு மற்றும் தரம்வாய்ந்த சான்றிதழைப் பெற

**Diploma in Video Mixing**

*Course Contents*
- கணனி தொடர்பான அறிமுகம்
- இயக்க அமைப்பு (Windows XP)
- Internet & e-mail
- Adobe Photoshop
- Adobe Premiere
- Cool 3D Studio
- Pinnacle Studio
- VCD Cutter
- Extra practical

Course fee :- 3000/=

Free Study Pack & Photos CD

**Diploma in Graphic Designing**

*Course Contents*
- கணனி தொடர்பான அறிமுகம்
- இயக்க அமைப்பு (Windows XP)
- Internet & e-mail
- Adobe Photoshop
- CorelDRAW
- Cool 3D Studio
- Macro media Flash MX
- Introduction to 3D Albam
- Extra practical

Course fee :- 2000/=

நன்மைகள்:-
- பாடநெறியின் இறுதியில் பூரண அறிவைப் பெற்றுக்கொள்வதற்கான உத்தரவாதம்.
- அடிப்படையிலிருந்து கற்பிக்கப்படுவதால் கணனி தொடர்பான முன்னறிவு அவசியமில்லை.
- தராதரமும் நீண்ட அனுபவமும் கொண்ட விரிவுரையாளர்களால் கற்பிக்கப்படுகின்றது.
- 100% செய்முறைப் பயிற்சிகளுடனான விரிவுரைகளிற்கு உத்தரவாதம்.

வகுப்புக்கள் ஆரம்பம்:- 05/06/2006 :- 08.30

## வீட்டுக்கிருத்திய அழைப்பு

அமரர்
**அற்புதராசா சுரேஸ்குமார்**



17.04.2006 திங்கட்கிழமை அன்று இறைபதம் அடைந்த எனது அன்பு மகன் அவர்களின் வீட்டுக்கிருத்தியக் கிரியைகள் இன்று (31.05.2006) புதன்கிழமை முற்பகல் 11 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறவுள்ளதால் அத்தருணம் தாங்களும் வருகைதந்து கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

(தனிப்பட்ட அழைப்பாகவும் ஏற்றுக்கொள்ளவும்)

- குடும்பத்தினர்.

தபாற்கந்தோர் வீதி,
சாவகச்சேரி.

(50693)
(24.17.15.21)

## ஆஸ்திரேலிய புலமைப் பரிசில்கள்
## ஆஸ்திரேலிய தலைமைத்துவ விருதுகள்
### எதிர்காலத் தலைவர்களுக்கான ஓர் சந்தர்ப்பம்

ஆஸ்திரேலிய அரசின் ஆஸ்திரேலிய புலமைப்பரிசில் வேலைத்திட்டத்தினுள் ALA எனப்படும் ஆஸ்திரேலிய தலைமைத்துவ விருதுகள் ஓர் புதிய பரிசுத் திட்டமாகும். ALA புலமைப்பரிசில் நோக்கமானது ஆசிய பசுபிக் பிரதேசத்தினுள் தலைமைத்துவத்தை அபிவிருத்தி செய்தலாகும்.

ALA புலமைப்பரிசில்களானது, முதுமாணி அல்லது கலாநிதி மட்டத்தில் ஆஸ்திரேலியாவில் நீண்டகாலப் பின் பட்டக்கல்விக்குரியதாகும். சர்வதேச அபிவிருத்திக்கான ஆஸ்திரேலிய நிறுவனத்தால் (AUS AID) முகாமைத்துவப்படுத்தும் ALA ஆனது போட்டிக்குரியதாகும். சர்வதேச அபிவிருத்தி உதவிகளைப் (ODA) பெறும் நாடுகளின் பிரஜைகளுக்கானதே இப் பரிசுத் திட்டமாகும்.

ஜனவரி 2007 ஆம் ஆண்டு ஆஸ்திரேலியப் பல்கலைக்கழகம் தொடங்குவதற்கு ஏற்ப இப்போது விண்ணப்பப்பத்திரங்கள் அனுப்ப முடியும். முடிவுத்திகதி 31 யூலை 2006 ALA க்குரிய பொருத்தமான கல்வித் துறைகளாக உள்ளடக்கக் கூடியன முகாமைத்துவம், வரலாறு, பொருளியல், வர்த்தகம், அரசறிவியல், தத்துவம், சட்டம், பொதுஜனக் கொள்கை ஆகியனவாகும். 2007 இல் முன்னுரிமை அளிக்கும் துறைகளாக சர்வதேச வர்த்தகம், தொற்றிப்பரவும் நோய்கள், பாதுகாப்பு, தூயசக்தி என்பனவாகும்.

பின்வருவனவற்றை நிரூபிக்கத்தக்க விண்ணப்பதாரிகளுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

1. தலைமைத்துவ வ-கி பாகத்திலுள்ளவர்கள் அல்லது
11. அரசு, தனிப்பட்ட அல்லது கழகத்துறைகளில் தலைமைத்துவ வ-கி பாகத்தை ஏற்கக் கூடிய உள்ளாற்றல் உள்ளவர்கள்.

இவை ஒவ்வொன்றிலும் விண்ணப்பத்தாரிகளுக்கான புள்ளியானது, பிரதேச, தேசிய மட்டங்களில் அபிவிருத்தியை ஏற்படுத்துவதில் செல்வாக்குச் செலுத்தக் கூடிய விண்ணப்பதாரிகளுக்கு வழங்கப்படும்.

### அத்தியாவசியமாக எதிர்பார்க்கப்படும் தேவைகள்

* உயர்தர பட்டப்படிப்பிலோ அல்லது பின் பட்டப்படிப்பிலோ பெற்ற சாதனைக்குரிய பதிவு, அத்துடன்
* உயர்ந்த ஆங்கில மொழி ஆற்றல்

ஆண்கள், பெண்களுக்கிடையே விருதுகள் சமனாகப் பங்கிடப்படும்.

மேலதிகத் தகவல்களுக்காக அணுகவும்

www.australianscholarships. gov.au

அல்லது மின்னஞ்சல் செய்யவும்

ala@ausaid. gov.au

(சி.49470) (39.21.17.15)

## யாழ்ப்பாணம் - மாநகரசபை
## இறைச்சிக்கடைகள் மீள் கேள்வி அறிவித்தல் - 2006

கீழ்வரும் இறைச்சிக்கடைகளுக்கு 15.06.2006ஆம் திகதி தொடக்கம் 31.12.2006ஆந் திகதி வரையான காலத்திற்கு குத்தகைக்கு வழங்குவதற்கான மீள் கேள்விகள் கோரப்படுகின்றன.

கேள்விப்படிவம் வழங்கும் இறுதித் திகதி: 08.06.2006ஆம் திகதி வியாழக்கிழமை பிற்பகல் 12.30 மணிவரை

கேள்விப்படிவம் ஏற்றுக்கொள்ளும் இறுதித்திகதி: 08.06.2006ஆந் திகதி வியாழக்கிழமை பிற்பகல் 1மணி வரை

| | | பிணைப் பணம் | ஆகக்குறைந்த கேள்வித்தொகை |
|---|---|---|---|
| 1. நரிக்குன்று மாட்டிறைச்சிக்கடை | | 5000/- | 1,00,000/- |
| 2. நாவாந்துறை மாட்டிறைச்சிக்கடை | இல.2 | 2500/- | 56,500/- |
| 3. நாவாந்துறை ” | இல.4 | 2 500/- | 60,000/- |
| 4. நாவாந்துறை ” | இல.5 | 2500/- | 40,000/- |
| 5. நாவாந்துறை ” | இல.6 | 2500/- | 25,000/- |
| 6. நாவாந்துறை ” | இல.7 | 2500/- | 25,000/- |
| 7. நாவாந்துறை ” | இல.8 | 2500/- | 25,000/- |
| 8. நாவாந்துறை ” | இல.9 | 2500/- | 25,000/- |

மேலதிக விவரங்கள் தேவைப்படின் அலுவலக நேரத்தில் வந்து பெற்றுக் கொள்ளலாம்

### மீள் கேள்வி அறிவித்தல் - குருநகர் சந்தைக்கடைகள்

குருநகர் சின்னக்கடையில் கீழ்மாடி உட்புறம், மேல்மாடி வெளிப்புறம், உட்புறம் அமைந்துள்ள கடைகளுக்கான கேள்வி விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

சபையினால் கேள்விப்படிவம் வழங்கும் : இறுதித்திகதி 08.06.2006ஆம்திகதி வியாழக்கிழமை பிற்பகல் 12 மணிவரை.

கேள்விப்படிவம் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித்திகதி 08.06.2006ஆந் திகதி வியாழக்கிழமை பிற்பகல் 1.30 மணிவரை.

கடைகள் பற்றிய முழுவிவரங்களும், கேள்வி நடைமுறைகளும் 17.03.2006ஆந் திகதி உதயன், வலம்புரி பத்திரிகைகளில் பிரசுரிக்கப்பட்டுள்ளது. அல்லது அலுவலக நேரத்தில் நானாவித இறைவரிப் பகுதியில் வந்து பெற்றுக் கொள்ளலாம்.

மாநகரசபை அலுவலகம்,
யாழ்ப்பாணம்.
29.05.2006

சீ.வி.கே.சிவஞானம்
மாநகர ஆணையாளர், யாழ்ப்பாணம்.

(சி 49475)(21.15.17)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிளிநொச்சி வைத்தியசாலையில் மருந்து வகைகளுக்குப் பெரும் தட்டுப்பாடு

பரந்தன்,மே 31

கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலைக்கு இரண்டாவது காலாண்டுக்குரிய மருந்து வகைகள் இதுவரை வந்து சேராமையால் அங்கு மருந்து வகைகளுக்குப் பெரும் தட்டுப்பாடு நிலவுவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலைக்கு ஏப்ரல் மாதத்தில் வழங்கப்படவேண்டிய இராண்டாவது காலாண்டுக்குரிய மருந்து வகைகள் மே மாதம் முடிவுறும் தறுவாயிலுள்ள நிலையிலும், இதுவரை சுகாதாரத் திணைக்களத்தினால் அனுப்பிவைக்கப்படவில்லை எனவும் இதன் காரணமாக கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலையில் முக்கியமான மருந்து வகைகளுக்குப் பெரும் தட்டுப்பாடு நிலவி வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

தற்போதுள்ள இராணுவ நெருக்கடி நிலை காரணமாக யாழ். மாவட்டத்திலிருந்து பெருமளவு மக்கள் இடம்பெயர்ந்து கிளிநொச்சி மாவட்டத்தில் குடியமர்ந்துவரும் நிலையில் மேற்படி வைத்தியசாலைக்குரிய மருந்து வகைகள் வந்து சேராமையால் நோயாளர்கள் பெரிதும் பாதிப்புக்குள்ளாகியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (352)

# கரியாலை நாகபடுவான் பாடசாலை கட்டடப் பணிகள் பூர்த்தியடையும் நிலை

வட்டக்கச்சி,மே31


கரியாலை நாகபடுவான் இல. 02 அ.த.க. பாடசாலையின் புதிய கட்டட வேலைகள் பூர்த்தியாகும் நிலையில் உள்ளதாக பாடசாலை முதல்வர் ஆ.குமரகுருபரன் தெரிவித்தார்.

கடந்த ஆண்டு 'யுனிசெப்' நிறுவனத்தின் நிதியுதவியுடன் 25 இலட்சம் ரூபா செலவில் அமைக்கப்பட்டு வந்த 100x25 அளவிலான நிரந்தர வகுப்பறைக் கட்டட வேலைகளே முடிவடையும் நிலையில் உள்ளது.

இப்பாடசாலை கடந்த 25 ஆண்டுகளாக 100x20 அளவுடைய ஒரேயொரு நிரந்தரக் கட்டடத்துடன் இயங்கி வந்தது.

இப்பாடசாலையில் ஏற்கனவே 'யுனிசெவ்' நிறுவன நிதியுதவியுடன் 68 லட்சம் ரூபா செலவில் அமைக்கப்பட்ட சிறுவர் பூங்கா திறந்து வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

கடந்த மாதம் நடைபெற்ற இத்திறப்பு விழா நிகழ்வில் கிளிநெந்சி வலய பிரதிக்கல்விப் பணிப்பாளர் க.ம.பத்மநாதன் பிரதம விருந்தினராகக் கலந்து பூங்காவைத் திறந்து வைத்தார். (405)



முள்ளியவளை மகப்பேற்று நிலையத்தில் கட்டாக் காலிகளின் தொல்லை அதிகரித்துள்ளதால் பொதுமக்கள் பெரும் சிரங்களை எதிர்கொண்டு வருகின்றனர். உரியவர்கள் இவ்விடயத்தைக் கவனத்தில் எடுக்கவேண்டுமென மக்கள் கேட்டுள்ளனர். மகப்பேற்று நிலையத்தில் கட்டாக்காலிக் கால்நடைகள் திரிவதைப் படத்தில் காணலாம். (352)

# பாவனைக்குதவாத பொருள்கள் அழிப்பு

புளியங்குளம்,மே31

வன்னிப் பெருநிலப் பரப்பில் தமிழீழ சுகாதார சேவையினரின் பகுப்பாய்வுப் பிரிவினரால் காலாவதியான - பதனிழந்த உணவுப்பொருள்கள் இனங்காணப்பட்டு அழிக்கப்பட்டு வருகின்றன.

தற்போது பல்வேறு இடங்களிலும் தொற்று நோய்கள் பரவும் நிலைமை காணப்படுகின்றது. இதனைக் கருத்தில் கொண்டு தமிழீழ சுகாதார சேவையினர் பல்வேறு இடங்களிலும் உணவுப் பொருள்களைப் பரிசோதனை செய்து வருகின்றனர்.

இவ்வாறான பதனிழந்த - காலாவதியான - தரமற்ற உணவுப் பொருள்களைத் தொடர்ந்து விநியோகம் செய்பவர்கள் மீது உரிய முறையில் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் தமிழீழ சுகாதார சேவையினர் அறிவித்துள்ளனர். (355)

# உடனடி அனர்த்தக் குழு அமைப்பு

கிளிநொச்சி,மே31

திருமுறிகண்டிப் பிரதேசத்தில் உடனடி அனர்த்தக் குழுவொன்று தமிழீழ சுகாதார சேவையினரால் தெரிவுசெய்யப்பட்டுள்ளது.

இக்குழுவின் தலைவராக தி.ஜீவானந்தம், உபதலைவராக த.விஜியராசா, செயலாளராக வே.நாகராசா ஆகியோர் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர்.

இவர்களுடன் மேலும் 8 பேர் இக்குழுவில் அங்கத்தவர்களாக இணைக்கப்பட்டுள்ளனர்.

# மன்னாகண்டல் வீதி மோசமான நிலையில்

ஒட்டுசுட்டான்,மே31

முத்தையன்கட்டு - மன்னாகண்டல் வீதி மிகவும் மோகசமாகப் பாதிக்கப்பட்டுள்ளதால் மக்கள் போக்குவரத்துச் செய்வதில் பெரும் சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

முத்தையன்கட்டு - மன்னாகண்டல் வீதி அதிகம் போக்குவரத்துக்குப் பயன்படுத்தப்படும் முக்கிய வீதியாகவுள்ளது.

ஆயினும் சைக்கிளில்கூட இவ்வீதியால் செல்லமுடியாத நிலையே தற்போது காணப்படுவதாகப் பயணிகள் குற்றஞ்சாட்டுகின்றனர்.

எனவே, உரியவர்கள் இவ்விடயத்தில் கவனமெடுத்து மக்களின் அசௌகரியங்களைப் போக்க முன்வரவேண்டுமென மக்கள் கேட்டுள்ளனர். (341)

# மக்கள் பங்களிப்புடன் வீதி புனரமைப்பு

வட்டக்கச்சி,மே31

வட்டக்கச்சியில் மக்கள் பங்களிப்புடன் வீதி புனரமைப்புச் செய்யப்பட்டு வருகிறது.

சில்வா வீதி, தபால் பெட்டிச் சந்தியில் இருந்து ஆறுமுகம் வீதி புதுப்பாலச்சந்திக்குச் செல்லும் குறுக்கு வீதியே இவ்வாறு புனரமைப்புச் செய்யப்பட்டு வருகிறது.

இவ்வீதியில் உள்ள மக்கள் அனைவரும் ஒன்றிணைந்து இந்த வீதிப் புனரமைப்புப் பணிகளில் ஈடுபட்டு வருகின்றனர். (405)

# பாதிக்கப்பட்ட மக்களுக்கு வீடுகள் கையளிப்பு

பரந்தன்,மே31

முல்லைத்தீவில் ஆழிப்பேரலையால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு 'கியூடெக் - கரித்தாஸ்' நிறுவனத்தால் அமைக்கப்பட்ட வீடுகள் கையளிக்கும் நிகழ்வு கடந்த 20ஆம் திகதி முற்பகல் 9.30 மணிக்கு செல்வபுரம் கிராமத்தில் நடைபெற்றது.

'கியூடெக் - கரித்தாஸ்' நிறுவனத்தின் வன்னிக்கான இயக்குநர் அருட்தந்தை ஜாவிஸ் அடிகளார் தலைமையில் ஆரம்பமான நிகழ்வில் தமிழீழத் தேசியக் கொடியை வன்னி நாடாளுமன்ற உறுப்பினர் ச.கனகரத்தினம் ஏற்றினார். தொடர்ந்து நாடாளுமன்ற உறுப்பினர் ச.கனகரத்தினம் உட்படப் பல பிரமுகர்கள் மக்களுக்கான வீடுகளைக் கையளித்தனர். (352)

# முள்ளிக்குளம் கிராமத்தில் காட்டுயானைகளின் தொல்லை

பரந்தன்,மே31

மன்னார் - முள்ளிக்குளம் கிராமத்தில் காட்டுயானைகளின் தொல்லை அதிகரித்துள்ளதால் மக்கள் பெரும் அச்சத்தின் மத்தியில் வாழ்ந்துவருகின்றனர்.

அண்மைக்காலமாகக் காட்டுயானைகள் கிராமங்களுக்குச் செல்லும் சம்பவங்கள் அதிகரித்துக் காணப்படுகின்றன.

இவை கிராமங்களுக்குள் புகுந்து வாழைத் தோட்டங்கள், பயன்தரு மரங்கள், பயிர்கள் போன்றவற்றை அழித்து வருகின்றன.

அதுமட்டுமன்றி மக்களையும் அவை அச்சுறுத்தி வருகின்றன. இதன் காரணமாக அப்பகுதி மக்கள் பெரும் அச்சத்தின் மத்தியில் வாழ்ந்துவரு கின்றனர்.

இரண்டு மாதங்களாக இந்தக் காட்டு யானைகளின் தொல்லை அதிகரித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (352)

# 'கல்லறைக் குமுறல்கள்' தெருவெளி நாடகம்

பரந்தன்,மே31

ஆசிரியர் சந்திரமோகனின் நெறியாள்கையில் உருவான 'கல்லறைக் குமுறல்கள்' என்னும் தெருவெளிநாடகம் வடமராட்சி கிழக்குப் பிரதேசத்தில் அரங்கேற்றப்பட்டு வருகின்றது.

அத்துடன், நாடகத்தினிடையே இன்றைய சமகால அரசியல் கருத்துரைகளும் வழங்கப்பட்டு வருகின்றன. இதில் விடுதலைப் புலிகளின் கடற்புலிப் போராளிகள் கருத்துரைகள் வழங்கிவருகின்றனர். (352)

# காணிகளுக்கு மதில் அமைக்க முன் அனுமதி பெறவேண்டும்

## பிரதேச சபையினர் அறிவுறுத்து

வட்டக்கச்சி,மே31

கிளிநொச்சி, திருநகர் வீதிப் பகுதியில் குடியிருப்பவர்கள் தமது காணிகளுக்குச் சுற்றுமதில்கள் அமைப்பதாயின் பிரதேச சபையின் அனுமதி பெறவேண்டும் எனக் கரைச்சிப் பிரதேச சபை அறிவித்துள்ளது.

இதுதொடர்பாகப் பிரதேச சபையினர் தெரிவித்துள்ளதாவது:-

வீதியின் அருகில் குடியிருப்பவர்கள் சுற்று மதில்கள் அமைப்பதாயின் அவர்கள் சில விதிமுறைகளைக் கையாளவேண்டும்.

எவ்வளவு தூரத்திற்கப்பால் மதில்கள் அமைக்கவேண்டும் போன்ற விதிகளைக் காணி உரிமையாளர்கள் பிரதேச சபையினரிடம் கேட்டு அறிந்துகொள்ளவேண்டும்.

சுற்றுமதில் அமைக்க விரும்புவோர் முதலில் பிரதேச சபையின் அனுமதிக்கு விண்ணப்பிக்கவேண்டும். அவ்வாறு விண்ணப்பிக்கும் பட்சத்தில் பிரதேச சபையின் பொறியியல் பகுதியினர் உரிய விதிமுறைகளுக்கேற்ப அனுமதிவழங்குவர்.

பிரதேச சபையின் அனுமதியின்றி விதிமுறைகளுக்கு மாறாகச் சுற்றுமதில் அமைக்கும் காணி உரிமையாளர்கள் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படும். அத்துடன், அனுமதியின்றி அமைக்கப்படும் மதில்கள் பிரதேச சபையினரால் அகற்றப்படும் எனக் கரைச்சிப் பிரதேச சபையினர் தெரிவித்துள்ளனர். (405)

# ஜீ.சீ.ஈ. சாதாரண தரப் பரீட்சையில் சித்திபெற்ற மாணவர் கௌரவிப்பு

புதுக்குடியிருப்பு,மே31

முல்லைத்தீவு கல்வி வலயத்திற்குட்பட்ட பாடசாலைகளில் கடந்த ஆண்டு நடைபெற்ற ஜீ.சீ.ஈ. சாதாரண தரப் பரீட்சையில் ஐந்து பாடத்திற்கு அதிகமாக 'ஏ' தரத்தில் சித்தி பெற்ற மாணவர்களைப் பாராட்டிக் கௌரவிக்கும் நிகழ்வு அண்மையில் நடைபெற்றது.

புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரியின் பொன்விழா மண்டபத்தில் நடைபெற்ற இந்நிகழ்வில் தேசியக் கொடியைத் தமிழீழ கல்விக்கழகப் பொறுப்பாளர் வே.இளங்குமரனும் கல்வி வலயக் கொடியை வலயக் கல்விப்பணிப்பாளர் ப.அரியரத்தினமும் ஏற்றி வைத்தனர்.

இந்நிகழ்வில் புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரி, முள்ளியவளை வித்தியானந்தாக் கல்லூரி, குமுழமுனை ம.வி., இரணைப்பாலை ம.வி., உடையார்கட்டு ம.வி., விசுவமடு ம.வி., கலைமகள் வித்தியாலயம், வள்ளிபுனம் பாடசாலை மற்றும் கொக்குளாய், கொக்குத்தொடுவாய் ஆகிய பாடசாலைகளைச் சேர்ந்த 38 மாணவர்கள் பாராட்டிக் கௌரவிக்கப்பட்டனர்.

தமிழீழ மாணவர் அமைப்புப் பொறுப்பாளர் செ.முகுந்தன் மற்றும் கல்விக் கழகப் பொறுப்பாளர், பாடசாலைகளின் அதிபர்கள், ஆசிரியர்கள் உட்படப் பலர் இந்நிகழ்வில் கலந்துகொண்டனர். (353)

# இரவுவேளைகளில் பிரதேசக் காப்புப் பணி

வட்டக்கச்சி,மே31

வட்டக்கச்சிப் பிரதேசக் காப்புப் படையினர் இரவுநேரங்களில் காவல் கடமையில் ஈடுபட்டுவருகின்றார்கள்.

வட்டக்கச்சிப் பிரதேச நுழைவாயில், முக்கிய சந்திகள் உட்பட மிகவும் முக்கியமான இடங்களை மையமாகக் கொண்டு இவர்கள் காவலில் ஈடுபட்டு வருகின்றனர்.

தமது பிரதேசங்களைப் பாதுகாக்கும் பணியில் இவர்கள் ஆர்வமாகச் செயற்பட்டு வருகின்றனர்.

அரசியல்துறையினரின் ஏற்பாட்டில் இப்பணிகள் நடைபெற்று வருகின்றன. (405)






முல்லைத்தீவு மாவட்ட தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனமும் விவசாயத் திணைக்களமும் இணைந்து கிராம அபிவிருத்தி வங்கியின் நிதி உதவியுடன் விவசாயிகளுக்கு 2006 சிறுபோகத்திற்கென பல்வேறு உதவிகளை வழங்கிவருகின்றனர்.

புதுக்குடியிருப்பு கமநல சேவை நிலையத்தில் நடைபெற்ற விதை உற்பத்தித் திட்ட நிகழ்வொன்றில் விவசாயப் போதனாசிரியர் ஒருவர் மாதிரித் துண்டத்திற்கான உரம் வழங்குவதை முதலாவது படத்திலும் - புதுக்குடியிருப்பு கமநல சேவை நிலையத்தில் நடைபெற்ற விதை உற்பத்தி நிகழ்வில் விவசாயிகளுடன் கலந்துரையாடல் நடத்தப்படுவதை அடுத்துள்ள படத்திலும் காணலாம்.

(படங்கள்: பரந்தன் செய்தியாளர்)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

## நீங்காத நினைவில் மூன்றாம் ஆண்டு

வையத்துள்
09
*
02
*
1932



வானுலகில்
04
*
06
*
2003

அமரர் கோணேசபிள்ளை சிவபாதசுந்தரம்
(ஓய்வுபெற்ற அதிகாரமளிக்கப்பட்ட உத்தியோகத்தர், சோலைவரிப் பகுதி, யாழ்-மாநகரசபை)
திதி: 31.05.2006

*அறியாமல் ஓடியது ஆறாறு திங்கள்*
*அழியாமல் தங்கியது ஆறாத துயரம்*
*தெய்வமாய், தந்தையாய் வாழ்ந்திட்ட உங்கள்*
*நினைவதனை மறக்காமல் தவிக்கிறோம் நாங்கள்.*

என்றும் நீங்கா நினைவுடன்:
118/4, பிறவுண் வீதி,
நீராவியடி, யாழ்ப்பாணம்.
**மனைவி, மக்கள், மருமக்கள்.**

(50682)(32-15-14)

## பகிரங்க அறிவித்தல்

இத்தால் சகலருமறிக, டச்சுறோட், சாவகச்சேரி குழந்தை வேலு தவராசா ஆகிய நான் அறியத்தருவது-

சுன்னாகம், டாக்டர் சுப்பிரமணியம் வீதியைச் சேர்ந்த இராசமணி இரவீந்திரகுமார் என்பவர் தனக்குச் சொந்தமானதும் சுன்னாகத்தில் அமைந்துள்ளதும் 2004 ஆம் ஆண்டு தை மாதம் 11 ஆம் திகதி பிரசித்த நொத்தாரிசு எஸ். சண்முகலிங்கம் முகதாவில் எழுதி நிறைவேற்றிய 1900 ஆம் இலக்க நன்கொடை உறுதியில் விவரிக்கப்பட்டதுமான ஆதனம் 'அடிச்சேரியும் சலையாட்டியும்' நிலப் பரப்பு குளி 1.89 ஐயும் அதில் அமைந்துள்ள கடைக் கட்டடத்தையும் 2005ஆம் ஆண்டு வைகாசி மாதம் 7 ஆம் திகதி பிரசித்த நொத்தாரிசு தம்பையா வேலாயுதம் முகதாவில் எழுதி நிறைவேற்றிய 2851ஆம் இலக்க பொருத்த அறுதி உறுதியால் அதில் குறிப்பிட்ட நிபந்தனைகளுக்கு அமைவாக எனக்குஅறுதி விற்றுள்ளார் என்றும் -

குறித்த 2851 ஆம் இலக்க உறுதியில் விவரிக்கப்பட்ட நிபந்தனைகள் உள.

குறிப்பிட்ட கால எல்லைக்குள் நிறைவேற்ற குறித்த இராசமணி இரவீந்திரகுமார் தவறிவிட்டார் என்றும் -

இதன் காரணமாக குறித்த 2851ஆம் இலக்க உறுதியில் விவரிக்கப்பட்ட ஆதனமான கடைக் கட்டடத்தின் சட்டப் படியான உருத்தாளர் நான் என அறியத்தருகிறேன். அதன் காரணமாக இவ்வாதனத்தை நான் அறுதி விற்கவுள்ளேன் என்பதையும் அறியத்தருகிறேன்.

இவ்வாதனம் தொடர்பாக ஏதும் நயமுருத்து சோந்தை உள்ளவர்கள் இவ்வறிவித்தல் பிரசுமான தினத்தில் இருந்து 14 நாள்களுக்குள் முறைப்படியான தடை உத்தரவு ஏதும் எனக்கு கிடைத்காதவிடத்து இவ்வாதனம் என்னால் அறுதி விற்கப்படும் என்பதையும் அறியத்தருகிறேன்.

**வி.கே. தவராசா**
**(கு.தவராசா).**

(50671)(18-32-15-14)

## மனிதவள மேம்பாட்டுப் பகுதி
## நிதித்துறை
### கணக்கியற் பயிற்சிநெறிக்கான வேண்டுகை

பின்வரும் தகைமையுடைய ஆ[illegible]களிடமிருந்து கணக்கியற் பயிற்சி நெறிக்கான வேண்டுகைகள் கோரப்படுகின்றன.

*தகைமைகள்:*
01. கல்வித்தகைமை: க.பொ.த.சாதாரண தரத்தில் தமிழ், கணிதம், ஆகிய பாடங்களில் தேர்ச்சி யடைந்திருத்தல் வேண்டும்.
02. அகவை: 16 தொடக்கம் 21 வரை.

*குறிப்பு:*
01. வேண்டுகை முடிவு நாள்: 10.06.2006
02. நேர்காணல் நடைபெறும் நாள்: 12.06.2006, காலை9 மணி
03. நேர்காணல் நடைபெறும் இடம்:
மனிதவள மேம்பாட்டுப் பகுதி,
நாகதம்பிரான் வீதி,
ஆனந்தபுரம், கிளிநொச்சி.
04. நேர்காணலுக்கு வருகை தருவோர் கல்வித் தகைமைச் சான்றிதழ்கள், பிறப்புச் சான்றிதழ், வதிவிடச்சான்றிதழ், அடையாள அட்டை, ஏனைய சான்றிதழ்கள் ஆகியவற்றின் படிகளுடன் வரவேண்டும்.
05. பயிற்சிக்காலத்தில் தங்குமிட வசதி உண்டு.
* மாதந்தோறும் உரூபா ஐயாயிரம் (5000/-) உதவுதொகையாக வழங்கப்படும்.
* உணவு வழங்கப்படும். உதவுதொகையிலிருந்து உணவுச் செலவு கழிக்கப்படும்.
06. வேண்டுகை அனுப்ப வேண்டிய முகவரி: பொறுப்பாளர்,
மனிதவள மேம்பாட்டுப் பகுதி,
நாகதம்பிரான் வீதி,
ஆனந்தபுரம், கிளிநொச்சி.
07. பயிற்சியின் நிறைவில் தகைமைச் சான்றிதழுடன் பொருத்தமான பணியும் வழங்கப்படும்.

ஆளுகை,
மனிதவள மேம்பாட்டுப்பகுதி,
நிதித்துறை.

(சி.49967)(39-15-14-32)

## சமய சந்நிதிகளில்

யாழ்ப்பாணம், மே 31

கோண்டாவில் தில்லையம்பதி சிவகாமி அம்பாள் ஆலய பெருந்திருவிழா நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணிக்குக் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகித் தொடர்ந்து 10 தினங்கள் நடைபெறவுள்ளது.

எதிர்வரும் 10 ஆம் திகதி முற்பகல் 10.30 மணிக்குத் தேர்த்திருவிழாவும் மறுநாள் முற்பகல் 10 மணிக்குத் தீர்த்தத்திருவிழாவும் நடைபெறவுள்ளன.

* * *

யாழ்ப்பாணம், மே 31

நீராவியடி வீரகத்தி விநாயகர் ஆலய அலங்காரத்திருவிழா இன்று புதன்கிழமை ஆரம்பமாகித் தொடர்ந்து 10 தினங்கள் நடைபெறவுள்ளது.

இன்று சங்காபிஷேகத்துடன் அலங்கார திருவிழா ஆரம்பமாகவுள்ளது.

* * *

யாழ்ப்பாணம், மே31

அளவெட்டி கும்பழாவளைப்பிள்ளையார் ஆலய வருடாந்த பெருந்திருவிழா நாளை வியாழக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகித் தொடர்ந்து 11 தினங்கள் நடைபெறவுள்ளது.

எதிர்வரும் 9 ஆம் திகதி வெள்ளிக்கிழமை சப்பரத் திருவிழாவும் 10 ஆம் திகதி சனிக்கிழமை தேர்த்திருவிழாவும் மறுநாள் 11 ஆம் திகதி தீர்த்தத் திருவிழாவும் நடைபெறவுள்ளன.

* * *

யாழ்ப்பாணம், மே31

கோண்டாவில் உப்புடம் சந்திரசேகரப்பிள்ளையார் ஆலய பெருந்திருவிழா இன்று புதன்கிழமை முற்பகல் 11 மணிக்குக் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகித் தொடர்ந்து 10 தினங்கள் நடைபெறவுள்ளது.

எதிர்வரும் 7ஆம் திகதி புதன்கிழமை சப்பரத்திருவிழாவும் 8ஆம் திகதி வியாழக்கிழமை காலை 7 மணிக்குத் தேர்த்திருவிழாவும் மறுநாள் 9ஆம் திகதி முற்பகல் 10 மணிக்குத் தீர்த்தத் திருவிழாவும் நடைபெறவுள்ளன.

## பொது அறிவுப் போட்டி

யாழ்ப்பாணம்,மே31

நயினாதீவு பிடாரி அம்பாள் ஆலய வேள்வி தினத்தை முன்னிட்டு பிடாரி அம்பாள் சன சமூகத்தினர் நடத்தும் பொது அறிவுப் போட்டிப் பரீட்சை இல - 15 எதிர்வரும் 3ஆம் திகதி சனிக்கிழமை காலை 8.30 மணிக்கு நயினாதீவு ஸ்ரீ கணேச கனிஷ்ட வித்தியாலத்தில் நடைபெறும் எனப் பரீட்சைப் பகுதியினர் அறிவித்துள்ளனர்.

## பாராட்டிக் கௌரவிப்பு

யாழ்ப்பாணம்,மே31

கோண்டாவில் நெட்டிலிப்பாய் பிள்ளையார் ஆலயத்தில் கடந்த 45 வருடங்களாகப் பூசகராகவும் பிரதம சிவாச்சாரியராகவும் பணியாற்றிய சிவஸ்ரீ நா.ஹரிஹரக்குருக்களது சேவை நலன் பாராட்டு விழா அண்மையில் இடம்பெற்றது.

இவரது சேவையைப் பாராட்டி ஆலய பரிபாலன சபையினர் 'சிவாகம கிரியா வித்தகர்' என்ற பட்டம் வழங்கி பொன்னாடை போர்த்துப் பொற்கிழி வழங்கிக் கௌரவித்தனர்.

## மல்லாகம் நீதிமன்றில் சனியன்று ஏலவிற்பனை

யாழ்ப்பாணம்,மே31

மல்லாகம் மாவட்ட நீதிவான் நீதிமன்றத்தினால் பறிமுதல் செய்யப்பட்ட உரிமை கோரப்படாத சைக்கிள்கள் எதிர்வரும் சனிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு ஏலத்தில் விற்பனை செய்யப்படவுள்ளன.

அன்றைய தினம் ஏலம் நடைபெறுவதற்கு அரை மணித்தியாலத்திற்கு முன்னர் விற்பனை செய்யப்படவுள்ள சைக்கிள்களை பார்வையிடலாம் என்றும் -

ஏலத்தில் வாங்கப்படும் பொருள்களுக்கு உடன் பணம் செலுத்தி நீதிமன்ற வளவிலிருந்து எடுத்துச்செல்லப்படவேண்டும் என்றும் - மல்லாக மாவட்ட நீதிவான் நீதிமன்ற பதிவாளர் தெரிவித்தார். (204)


AIMS
ACADEMY OF INFORMATION MANAGEMENT & SYSTEM STUDIES
புதிய பிரிவுகள் ஆரம்பம் 04-06-2006

Computing for KIDS
பெற்றோர்களே! உங்கள் பிள்ளைகளின் எதிர் காலத்துக்கு வழிகாட்டுவது யார்? AIMS உடன் இணைந்து வாழ்க்கையை வளமாக்குங்கள்.
Age Limite: 5 to 14 years

Fast Track Program
- MS Office-2003
Introduction, Word, Excel, Access, Power Point.
- PC Maintenance
Introduction, Generation & Types, Components, Assembling, Basic DOS Commands, O/S Installation, Setup & Configuration.

15 Days Only
மேலதிக விபரங்களுக்கு
Drictor,
# 118,பலாலி வீதி ,தபாற்பெட்டி சந்தி ,திருநெல்வேலி
Center for FOSS & LAMP


## 'புலரி' சஞ்சிகை வெளிவந்தது

சித்தன்கேணி கலை இலக்கிய வட்டத்தின் வெளியீடான 'புலரி' காலாண்டு சஞ்சிகையின் முதலாமாண்டு சிறப்பிதழ் வெளிவந்துள்ளது.

இதில் 'புதுமைப்பித்தன்' நூற்றாண்டு எனும் தலைப்பில் கலாநிதி சு.ஜெபநேசன், கலாநிதி ம.இரகுநாதன் எழுதிய சமுதாய வாழ்வை நெறிப்படுத்தும் உயிரினங்கள் 'வல்லியக்கனும் வல்லிபுரநாதரும்' எனும் தலைப்பில் பேராசிரியர் பொ.இரகுபதி எழுதிய ஒரு வரலாற்று ஆய்வுக் கட்டுரையும் வரையப்பட்டுள்ளன.

ஆசிரியர் ஆறுமுகம் சபாரத்தினத்தின் நேர்காணலும் தொல்புரம் சி.கதிர்காமநாதனின் சிறுகதையும், கவிஞர் சோ.பத்மநாதனின் கவிதையும் எனப் பல்வேறு அம்சங்களைத்தாங்கி புதுப்பொலிவுடன் 'புலரி' இம்முறை வெளிவந்துள்ளதாக அதன் ஆசிரியர் ந.குகபரன் தெரிவித்தார். (13)

காரைநகர் - களபூமி பாலாவோடை குறிஞ்சாக்குளி

## ஸ்ரீ முத்துமாரி அம்மன் கோயில்
### விய வருஷ பிரம்மோற்சவ விஞ்ஞாபனம்

வைகாசி மாதம் 18 ஆம் நாள் (2006.06.01) கொடியேற்றம் மு.ப 10.00
வைகாசி மாதம் 24 ஆம் நாள் (2006.06.07) வேட்டைத்திருவிழா
வைகாசி மாதம் 25 ஆம் நாள் (2006.06.08) சப்பரத்திருவிழா
வைகாசி மாதம் 26 ஆம் நாள் (2006.06.09) தேர்த்திருவிழா காலை 8 மணி
வைகாசி மாதம் 27 ஆம் நாள் (2006.06.10) தீர்த்த திருவிழா மு.ப 10.00
வைகாசி மாதம் 28 ஆம் நாள் (2006.06.11) பூங்காவனம்
வைகாசி மாதம் 30 ஆம் நாள் (2006.06.13) வேள்வியும் வைரவர் பொங்கலும் காலை 8.00

மஹோற்சவ குரு :
சத்தியோயாத சிவாச்சாரியார்
பிரம்மஸ்ரீ கு.சண்முகராஜக்குருக்கள்
(ஆலய பிரதம குரு)

(50597)(23-32-14-15)
**- ஆலய நிர்வாகம்.**

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

அன்னை மடியில்
28
*
02
*
1967



ஆண்டவன் அடியில்
10
*
06
*
2005

அமரர் **ரவிராஜா நித்தியானந்தன்**
(திதி : 30.05.2006)

*ஆண்டு ஒன்று நீங்கினாலும்*
*உம் நீண்ட துயில் நீங்கிடுமா?*
*எம் வேதனைதான் தீர்ந்திடுமோ*
*உன் ஆத்மா சாந்தியடைய*
*இறைவனைப் பிரார்த்திக்கும்*

-குடும்பத்தினர்.
கனடா
தொ.பே:- 001905456 6401

மூத்தநாயனார் கோயிலடி,
ஆனைக்கோட்டை.

(50639)(23-32-14-15)

## மரண அறிவித்தல்

### கந்தசாமி கமலாம்பிகை (பரமேஸ்வரி)



ஆறுகால்மடம், மயிலு வீதியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கந்தசாமி - கமலாம்பிகை 29-05-2006 திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் கந்தசாமியின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான ஐயாத்துரை- செல்லம்மா தம்பதியரின் சிரேஷ்ட புதல்வியும் சரவணமுத்து - சின்னம்மா தம்பதியரின் அன்பு மருமகளும் மன்னவராசா, குணராணி, ரதிதேவி ஆகியோரின் அன்புச் சகோதரியும் வசந்தகுமாரி (இந்தியா), வசீகரன், சிறிதரன் (பிரான்ஸ்), சேகரன், வளர்மதி, சீதா, கருணாகரன், தயாபரன் (இந்தியா), சசிகரன் ஆகியோரின் அன்புத் தாயும் ஆனந்தராஜா (ஜேர்மனி), கோமலா, சுபாஜினி, பிரியா, கண்ணன், சுதாகரன் (பிரான்ஸ்), ஜெசித்தா, லதா (இந்தியா) ஆகியோரின் பாசமிகு மாமியுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (31-05-2006) புதன்கிழமை 11 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளிற்காக கோம்பயன் மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்தத் தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

மயிலு வீதி,
ஆறுகால் மடம்,
ஆனைக்கோட்டை.

தகவல்:
**கணவர், பிள்ளைகள்,**
**மருமக்கள்,**
**பேரப்பிள்ளைகள்.**

(50684)(26-32-14-15)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்தியா - சீனா எல்லைப் பிரச்சினை பேச்சு மூலம் தீர்வு காணமுடியும்!

## அமைச்சர் பிரணாப் முகர்ஜி நம்பிக்கை

பீஜிங்,மே 31

இந்தியா - சீனா இடையேயான சிக்கலான பிரச்சினைகளுக்கு இரு தரப்பு பேச்சுகள் மற்றும் பரஸ்பர ஒத்துழைப்பு மூலம் தீர்வு காணமுடியும் என பாதுகாப்பு அமைச்சர் பிரணாப் முகர்ஜி கூறினார்.

பாதுகாப்பு அமைச்சர் பிரணாப் முகர்ஜி, ஜப்பான் மற்றும் சீனாவிற்கு உத்தியோகபூர்வ பயணம் மேற்கொண்டுள்ளார். ஜப்பானிலிருந்து கடந்த ஞாயிற்றுக்கிழமை பீஜிங் வந்த அமைச்சர் பிரணாப் முகர்ஜி செய்தியாளர்களிடம் கூறும்போது, 'சீனத் தலைவர்களுடன் நடத்தப்படும் பேச்சு மிகவும் பயனுள்ளதாக இருக்கும் என நம்புகிறேன். இந்தப் பேச்சு மூலம் இரு தரப்பு உறவுகள் பலப்படும் வாய்ப்பு ஏற்படும். இதன் மூலம் எனது சீன சுற்றுப் பயணத்திற்கான நோக்கம் நிறைவேறும் என நம்புகிறேன்' - என்றார்.

பின்னர் பிரணாப். முகர்ஜி, சீன மக்கள் விடுதலை இராணுவப் பிரிவு அறிவியல் கல்லூரிக்கு (பி.எல்.ஏ.) சென்றார். இதையடுத்து சீன வெளியுறவு அமைச்சக அலுவலகத்திற்கு சென்ற அவர், அங்கு வெளியுறவு அமைச்சர் லி ஷா வோஜிங்கை சந்தித்து இருதரப்பு உறவு மற்றும் அதைப் பலப்படுத்துவதற்கான வழிமுறைகள் குறித்து பேச்சு நடத்தினார். அப்போது அவர் கூறும்போது, 'இந்தியாவிற்கும், சீனாவிற்கும் இடையே உள்ள சிக்கலான பிர்ச்சினைகளுக்கு பேச்சுகள் மற்றும் பரஸ்பர ஒத்துழைப்பு ஆகியவை மூலம் தீர்வு காண முடியும். இரு நாட்டிற்கும் இடையே தீர்வு காணப்படாமல் இருக்கும் எல்லைப் பிரச்சினை தீர்க்கப்பட்டு இரு தரப்பு உறவில் மறுமலர்ச்சி ஏற்படும். இந்தியாவும், சீனாவும் நல்ல நட்பு நாடுகள். இரண்டு நாட்டிற்கும் இரு தரப்பு உறவு என்பது மிக முக்கியம் வாய்ந்த பிரச்சினை - என்றார்.

அமைச்சர் பிரணாப் முகர்ஜி தனது சுற்றுப் பயணத்தின்போது, சீனப் பாதுகாப்பு அமைச்சர் காவோ கன்சூயானை சந்தித்து பேசுகிறார். இராணுவத் துறையில் இரு தரப்பு ஒத்துழைப்பு தொடர்பான ஒப்பந்தம் கையெழுத்தாகிறது. இந்தப் பேச்சின்போது இந்தியா - சீனா இடையேயான எல்லை பிரச்சினை குறித்தும் விவாதிக்கப்படுகிறது.

### இந்தியா - சீனா இடையே இராணுவ உடன்பாடு கைச்சாத்து

இராணுவ ஒத்துழைப்பைப் பலப்படுத்தும் உடன்பாட்டில் இந்தியாவும், சீனாவும் கடந்த திங்கட்கிழமை கையெழுத்திட்டன.

இரு நாடுகளும் பரஸ்பரம் இராணுவ பயிற்சி மேற்கொள்ளவும், இராணுவ ஒத்திகை மேற்கொள்ளவும் இந்த ஒப்பந்தம் வகை செய்கிறது.

இந்த உடன்பாட்டில் இந்தியாவின் சார்பில் பாதுகாப்புத்துறை அமைச்சர் பிரணாப் முகர்ஜியும் சீனப் பாதுகாப்பு அமைச்சர் ஜெனரல் காவோ கன்சூயானும் கையெழுத்திட்டனர்.

முன்னதாக சீன இராணுவத் தலைமையகத்தில் இரு அமைச்சர்களும் சுமார் 2 மணி நேரம் இராணுவ ஒத்துழைப்புக் குறித்து விவாதித்தனர்.

# 17 ஆண்டுகளின் பின்னர் எதிர்க்கட்சித் தலைவர் பதவியில் முன்னாள் முதல்வர் ஜெயலலிதா

சென்னை,மே 31

சட்டப்பேரவை அ.தி.மு.க. தலைவராக முன்னாள் முதல்வர் ஜெயலலிதா நேற்றுமுன்தினம் ஏகமனதாகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

இதையடுத்து, சட்டப்பேரவையின் பிரதான எதிர்க்கட்சித் தலைவராக அவர் செயற்படுவார். பேரவையில் இனி முதல்வர் கருணாநிதிக்கு எதிரே அவரது இருக்கை அமையும்.

தேர்தலில் 61 இடங்களில் அ.தி.மு.க. வெற்றிபெற்று, பிரதான எதிர்க்கட்சி அந்தஸ்தைப் பெற்றது. முன்னாள் அமைச்சர் ஓ.பன்னீர்செல்வம் முன்னர் எதிர்க்கட்சித்தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

''அவையில் எனக்குப் பாதுகாப்பு இருக்காது. என்னை அவமரியாதை செய்வார்கள். 1989 மார்ச் 25 ஆம் திகதி பேரவையில் நடைபெற்ற சம்பவத்தை நான் மறக்கமாட்டேன். அதனால் சட்டப் பேரவைக்குச் செல்லமாட்டேன். இருப்பினும் முக்கிய விவாதங்களில் பங்கேற்பேன்'' என்று ஜெயலலிதா கூறியிருந்தார்.

இந்நிலையில், கடந்த வெள்ளிக்கிழமை சட்டப் பேரவையில் ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் மீது விவாதம் நடைபெற்றபோது, அ.தி.மு.க - காங்கிரஸ் உறுப்பினர்களுக்கு இடையே மோதல் ஏற்பட்டது. இதையடுத்து ஜெயலலிதா தவிர, 60 அ.தி.மு.க சட்டசபை உறுப்பினர்களும் அமர்வில் இருந்து நீக்கப்பட்டனர். இந்நிலையில், கடந்த சனிக்கிழமை முன்னாள் முதல்வர் ஜெயலலிதா தனிநபராகப் பேரவைக்குச் சென்று, நிகழ்ச்சிகளில் பங்கேற்று, ஆளுநர் உரையில் உள்ள குறைகளைச் சுட்டிக்காட்டிப் பேசினார். அதற்கு முதல்வர் கருணாநிதி பதில் அளித்தார். இருவருக்கும் இடையே விறுவிறுப்பாக நடைபெற்ற விவாதம் பேரவை உறுப்பினர்கள் உட்பட அனைவரையும் கவர்ந்தது.

இதனால் பிரதான எதிர்க்கட்சித் தலைவர் பொறுப்பை ஜெயலலிதா ஏற்கவேண்டும் என்ற அ.தி.மு.கவின் தோழமைக் கட்சித் தலைவர்களின் வாதம் மேலும் வலுவடைந்தது. இந்நிலையில் அ.தி.மு.க. சட்டசபை உறுப்பினர்கள் கூட்டம் ராயப்பேட்டையில் உள்ள அ.தி. மு.க. தலைமை அலுவலகத்தில் திங்கட்கிழமை காலையில் நடைபெற்றது. இதில் சட்டப் பேரவை அ.தி.மு.க. தலைவராக முன்னாள் முதல்வர் ஜெயலலிதா ஏகமனதாகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். 17 ஆண்டுகளுக்குப் பிறகு ஜெயலலிதா மீண்டும் பிரதான எதிர்கட்சித் தலைவராகியுள்ளார்.

சட்டப் பேரவை அ.தி.மு.க தலைவராக ஜெயலலிதா தேர்ந்தெடுக்கப்பட்டதற்கான கடிதத்தை பேரவைத்தலைவர் ஆவுடையப்பனிடம் அ.தி.மு.க சட்டசபை உறுப்பினர்கள் கொடுத்தனர்.



ஜெயலலிதாவுக்கு மலர்ச்செண்டு வழங்கி வாழ்த்துத் தெரிவிக்கும் ஓ.பன்னீர்செல்வம்.

# பிலிப்பைன்ஸில் நிலநடுக்கம்

மணிலா,மே31

மத்திய பிலிப்பைன்ஸ் பகுதியில் நேற்றுமுன்தினம் காலையில 4 முறை சிறிய அளவிலான நிலநடுக்கம் ஏற்பட்டது.


நேற்றுமுன்தினம் பிற்பகலில் ஆர்சிபிலோகா பகுதியில் 2முறை சிறிய அளவில் நிலநடுக்கம் ஏற்பட்டது. இதனால் எந்தப் பாதிப்பும் ஏற்படவில்லை. இது இந்தோனேசியாவில் ஏற்பட்ட பூகம்பத்தோடு தொடர்புடையது அல்ல என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தோனேசியாவில் கடந்த சனிக்கிழமை ரிச்டர் அளவுகோலின்படி 6.7 அளவு பூகம்பம் தாக்கியது. இதில் 5 ஆயிரத்திற்கும் அதிகமானோர் இறந்தனர். 2 லட்சத்திற்கும் அதிகமானோர் வீடுகளை இழந்துள்ளனர். இதைத் தொடர்ந்து இந்தோனேசியாவின் சுற்று வட்டாரப் பகுதிகளிலும் பூகம்பம் தாக்கும் என எதிர்பார்க்கப்பட்டது.

இந்நிலையில் பிலிப்பைன்ஸில் தினமும் 20 நில அதிர்வுகள் ஏற்படுகிறது. இவை அனைத்தும் சிறிய அளவிலான நிலநடுக்கம் என்பதால் பெரிய அளவில் பாதிப்புகளை ஏற்படுத்தவில்லை. மணிலாவிலிருந்து தென்கிழக்கில் 690கி.மீ. தொலைவில் சிறிய அளவில் பூமி அதிர்வு மையம் கொண்டிருப்பதாக பிலிப்பைன்ஸ் பூகம்பம் மற்றும் எரிமலை ஆராய்ச்சி மையம் தெரிவித்துள்ளது.

இது குறித்து எரிமலை, பூகம்பம் ஆராய்ச்சி நிலைய அதிகாரி ரென்னாட்டோ சோலிடம் கூறியதாவது:-

பிலிப்பைன்ஸில் இதுவரை 20 நில அதிர்வுகள் ஏற்பட்டுள்ளன. இவற்றில் பெரும்பாலான அதிர்வுகள் இலேசானவையாக இருந்தமையால் பொதுமக்கள் இதை உணரவில்லை. இந்தோனேசியாவில் ஏற்பட்டது போல் பலத்த சேதங்களை இந்த அதிர்வுகள் ஏற்படுத்தாது - என்றார்.



ஜேர்மனியில் எதிர்வரும் 9ஆம் திகதி உலகக் கிண்ண கால்பந்துப் போட்டி ஆரம்பமாகின்றது. இதனையொட்டி அந்த நாட்டு அணியின் கோல் காப்பாளர் ஒலிவர் கானை பெருமைப்படுத்தும் வகையில் வீதியொன்றின் மேலாக அமைக்கப்பட்டுள்ள 'கட்டவுட்' இது.

# நீதிபதிகளைக் கொலைசெய்த வழக்கு; தீவிரவாதிகள் 7 பேருக்கு மரணதண்டனை

டாக்கா,மே31

பஸ்ஸில் குண்டுவீசி இரண்டு நீதிபதிகளைக் கொன்ற வழக்கில் தீவிரவாதிகள் ஏழு பேருக்கு பங்களாதேஷ் நீதிமன்றம் மரண தண்டனை விதித்துள்ளது.

கடந்த 2005 நவம்பரில் பங்களாதேஷ் தலைநகர் டாக்காவின் தெற்கு பகுதியில், பஸ் ஒன்றில் இரண்டு நீதிபதிகள் நீதிமன்றத்துக்குச் சென்றுகொண்டிருந்தனர். அப்போது, தீவிரவாதிகள் சிலர் நீதிபதிகள் மீது குண்டுகளை வீசித் தாக்குதல் நடத்தினர். இந்தச் சம்பவத்தில் இரண்டு நீதிபதிகளும் உயிரிழந்தனர். மேலும், நான்கு பேர் காயமடைந்தனர்.

குண்டுவெடிப்பு சம்பவம் தொடர்பாக தீவிரவாதிகள் ஏழு பேர் மீது வழக்கு பதிவு செய்யப்பட்டது. ஜமாத் - உல் - முஜாகிதீன் தீவிரவாத இயக்கத் தலைவர் சையத் அப்தர் ரகுமான் மற்றும் ஜகர்தா முஸ்லிம் ஜனதா பங்களாதேஷ் தீவிரவாத இயக்கத் தலைவர் சித்திக்குல் இஸ்லாம் பங்களா பாய் உள்ளிட்ட ஆறு பேரை வழக்கு தொடர்பாக பொலீஸார் கைது செய்தனர். மற்றொருவர் தலைமறைவாக உள்ளார். இந்த வழக்குத் தொடர்பான விசாரணை முடிக்கப்பட்டு டாக்கா மாவட்ட நீதிமன்றத்தில் நேற்றுமுன்தினம் தீர்ப்பு வழங்கப்பட்டது. தற்போது பொலீஸ் காவலில் உள்ள ஆறு பேருழ் பலத்த பாதுகாப்புடன் நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டனர்.

தீர்ப்பு வழங்கிய நீதிபதி ரேஜா தாரிக் அகமது, சந்தேகத்திற்கு இடமில்லாத வகையில் குற்றச்சாட்டு நிரூபிக்கப்பட்டுள்ளதால் வழக்கில் தொடர்புடைய ஏழு பேருக்கும் தூக்குத் தண்டனை வழங்கப்படுகிறது - என்று உத்தரவிட்டார்.

# தனக்கு எதிரானோர் பற்றி புத்தகம் எழுதும் நட்வர்சிங்

உணவுக்கு எண்ணெய் திட்ட ஊழல் புகாரில் தன்னை சிக்க வைத்தவர்கள் மற்றும் தனது புகழுக்கு களங்கம் ஏற்படுத்தியவர்கள் குறித்து புத்தகம் எழுத முன்னாள் அமைச்சர் நட்வர் சிங் முடிவு செய்துள்ளார்.

ஈராக்கின் உணவுக்கு எண்ணெய் திட்டத்தில் ஆதாயம் பெற்றவர்கள் குறித்த பட்டியலை வெளியிட்ட வோல்கர் அறிக்கையில், முன்னாள் வெளியுறவு அமைச்சர் நட்வர் சிங், அவரது மகன் ஜகத் சிங், காங்கிரஸ் கட்சி உட்படப் பலரது பெயர்கள் இடம்பெற்றன. இது தொடர்பாக எழுந்த சர்ச்சையில் சிக்கிய நட்வர்சிங் தனது அமைச்சர் பதவியை இழந்தார். அது மட்டுமன்றி அவர் கட்சியில் இருந்தும் ஓரம் கட்டப்பட்டார்.

இந்த விசாரணையில் தன்னை சிக்க வைத்தவர்கள் குறித்த விவரங்களை வெளியிட நட்வர்சிங் முடிவு செய்துள்ளார். இதற்காக, 'வோல்கருக்கு எதிராக' என்ற புத்தகத்தை எழுத இருக்கிறார். அதில் தனது புகழ் சீர்குலைய காரணமானவர்கள் மற்றும் உணவுக்கு எண்ணெய் திட்ட அழுவத்தில் தன்னை சிக்க வைத்தவர்கள் என்று பலரையும் வெளிப்படுத்தவுள்ளார்.

# இந்தோனேசியாவின் 'மெராபி' எரிமலையின் சீற்றம் அதிகரிப்பு



யோக்யகர்த்தா,மே31

இந்தோனேசியாவில் கடந்த சனிக்கிழமை பூகம்பம் ஏற்பட்ட பிறகு அந்நாட்டிலுள்ள 'மெராபி' எரிமலையின் சீற்றம் மும்முடங்கு அதிகரித்துள்ளது.

உலகில் தீப்பிழம்பை அதிக அளவில் கக்கும் எரிமலைகளில் 'மெராபி' எரிமலையும் ஒன்றாகும். கடந்த பல வாரங்களாக இந்த எரிமலையிலிருந்து தீப்பிழம்பும் புகையும் வெளியேறி வந்தன. இதையடுத்து அப்பகுதியிலிருந்த மக்கள் அனைவரும் பாதுகாப்பான இடத்துக்கு அப்புறப்படுத்தப்பட்டனர்.

இந்நிலையில் கடந்த சனிக்கிழமை அப்பகுதியில் கடுமையான பூகம்பம் ஏற்பட்டது. அதன் பின்னர் 'மெராபி' எரிமலையின் சீற்றம் மும்மடங்கு அதிகரித்து விட்டது. கடந்த திங்கட்கிழமை இந்த சீற்றம் அதிக அளவில் இருந்ததாகத் தகவல்கள் தெரிவித்தன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அந்தியேட்டி அழைப்பும் நன்றி நவிலலும்

அன்னை மடியில்
18 - 11 -1982

ஆண்டவன் அடியில்
18 - 04 -2006

### அமரர் தங்கராசா கவீந்திரன்

கடந்த 18-04-2006 அன்று சிவபதமடைந்த எமது மகனின் மறைவுச் செய்தி அறிந்து நேரில் வந்து ஆறுதல் தந்தவர்களுக்கும், தொலைபேசி மூலம் ஆறுதல் தெரிவித்தோருக்கும் மற்றும் உதவிகள் பல புரிந்த நல்உள்ளங்களுக்கும் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவிப்பதுடன் நாளை (01-06-2006) வியாழன் நடைபெறும் சபிண்டீகரன அழைப்பிலும் அதனைத் தொடர்ந்து 02-06-2006 வெள்ளிக்கிழமை அன்று நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்து சிறப்பிக்கும் வண்ணம் உற்றார், உறவினர், நண்பர்கள், அன்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

புத்தூர் கிழக்கு,
புத்தூர். (50701)(26.

தங்கராசா
குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

### சுப்பிரமணியம் தேவராசா



குப்பிளானைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சுப்பிரமணியம் தேவராசா 29-05-2006 ஞாயிற்றுக்கிழமை அகால மரணமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற சுப்பிரமணியம் மற்றும் சின்னம்மா தம்பதியரின் அன்பு மகனும் சிவசக்தி (கனடா), சிவகுமார், மகாலட்சுமி, சிவராசா ஆகியோரின் சகோதரனும் செல்வநாயகம் (கனடா), அன்னலிங்கம் ரோசினி ஆகியோரின் மைத்துனரும் தனுஜா (கனடா), யதுஷன், சுவர்னா ஆகியோரின் மாமனாருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (31-05-2006) புதன் கிழமை பி.ப.4 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக காடாகரம்பை இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

நாவற்கிணற்றடி,
குப்பிளான் தெற்கு,
ஏழாலை. (50701)(26.11.15)

தகவல்:
சு.சிவகுமார்,
(சகோதரன்).

### சாரதி அனுமதிப்பத்திரம்: தொடர்பு கொள்ள அறிவுறுத்து

தென்மராட்சி பிரதேசத்தில் வாகன சாரதிய அனுமதி பத்திரம் தொலைந்த அல்லது புதுப்பித்தல் ஆகியவற்றுக்காக விண்ணப்பித்து ஒரு வருடமாகியும் இது வரை கிடைக்காதவர்கள் இன்று தென்மராட்சி பிரதேச செயலகத்தில் மோட்டார் போக்குவரத்துப் பிரிவுடன் தொடர்பு கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (117)

### நினைவு நிகழ்வு

வேலணை அரசினர் வைத்தியசாலையில் சேவையில் உயிர் நீத்த டாக்டர் மயில்வாகனம் இராசையாவின் ஓராண்டு பூர்த்தி நாளை நினைவு கூரப்படவுள்ளது.

அன்றைய தினம் வேலணை அரசினர் வைத்தியசாலையில் அஞ்சலிப் பிரார்த்தனை இடம்பெறும். அதேவேளை அவரது சொந்த இடமான ஊரிக்காடு நாவலடியில் ஞாபகார்த்த பிரார்த்தனை இடம்பெறும். உடுப்பிடி வடக்கு பிரதேச முன்னேற்ற சங்கம் டாக்டர் மயில் வாகனம் இராசையாவின் சேவையை நினைவு கூர்ந்து மரம் நடுவதற்குத் திட்டமிடப்பட்டுள்ளதாக சங்கத் தலைவர் தே.பிரசாத் தெரிவித்தார். (185)

### தொடர்புகொள்ளவில்லை

முகமாலை இராணுவச்சோதனை ஊடாக யாழ்ப்பாணம் நோக்கி வந்த 20 லொறிகள் முகமாலையில் தடுத்து வைக்கப்பட்ட விவகாரத்தில்-

யாழ்.மாவட்ட பாரவூர்தி உரிமையாளர் கூட்டுறவுச் சங்கத்தில் பதிவுசெய்த பாரவூர்திகள் எவையும் சம்பந்தப்பட்டு தடுக்கப்படவில்லை என்று சங்க நிர்வாகம் தெரிவித்துள்ளது. இது விடயமாக அரச அதிபருடன் தங்கள் சங்கம் தொடர்பு கொள்ளவில்லை என்றும் நிர்வாகம் தெரிவித்தது.

COMPUTERIZED ACCOUNTING
Speed Batch Only 30 Hours
Start on :- 03.06.2006
Days :- Sat, Sun
Time :- 3.30 - 4.30 p.m
Fees :- 2000/=
Only For 10 Students
கணக்கியல் அறிவில்லாதவர்களும் இணைந்து பயிற்சி பெற முடியும்.
பயிற்சிகள் யாவும் Qualified & Experienced Lecturers மற்றும் Banking Professionals ஆல் நடத்தப்படும்
C.B Computer Academy
T.P No. 021-4590291 Station Road, Kondavil.

### தாண்டிக்குளத்தில் கிளைமோர் மீட்பு

வவுனியா, தாண்டிக்குளம் தடைமுகாமுக்கு சமீபமாக நேற்று முன்தினம் முச்சக்கர வண்டி ஒன்றை படையினர் சோதனையிட முயன்றபோது அதில் பயணித்தவர்களும் சாரதிகளும் தப்பியோடிவிட்டனர் என்றும்-

குறித்த முச்சக்கர வண்டியிலிருந்து 11 கிலோ நிறையுடைய கிளைமோர் குண்டு ஒன்று மீட்கப்பட்டதாகவும்-இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் பிரசாத் சமரசிங்க தெரிவித்தார்.

## 45 ஆம் நாள் நினைவலைகள்

அன்னையின் மடியில்
03 - 08 - 1976



ஆண்டவன் அடியில்
17 - 04 - 2006

### அமரர் இராமலிங்கம் சகீலன்


(உரிமையாளர், கபிஷன் எலற்றிக்கல்ஸ், புத்தூர்ச்சந்தி மீசாலை, தனியார் சிற்றூர்தி உரிமையாளர்)

*வசந்தம் தேடிப் பறந்தவனே!*
*வசந்தம் வீசும் வேளை நீ எங்கு ஐயா*
*சென்று விட்டாய்? போய் வருகின்றேன் என*
*சிரித்துக் கொண்டு நீ சென்றாய்*
*சன்னமாக வந்த காலன் - உனை*
*சாவடித்த காரணம் யாதோ?*
*சடுதியாக நீ மறைந்த செய்தி கேட்டு*
*கதி கலங்கி வாடுகின்றோம்...*
*மாதங்கள் ஒன்றரை ஓடி மறைந்தாலும்*
*மறையாது உன் நினைவுகள் எம் நெஞ்சில்*
*-உயிர் உள்ளவரை*

இன்று (31-05-2006) புதன்கிழமை நடைபெறவுள்ள அந்தியேட்டிக் கிரியையிலும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அனைவரையும் அழைக்கின்றோம்.

மீசாலை வடக்கு,
கொடிகாமம். (50702)(26.11.15) -குடும்பத்தினர்.

## 31ஆம் நாள் அன்பு அஞ்சலியும் நன்றி நவிலலும்



அமரர்
### பஸ்ரியன் ஜோர்ஜ் சகாயதாஸ்
(சுரேஷ்)

(சந்தைப்படுத்தல் முகாமையாளர் - உதயன் நிறுவனம்)

தோற்றம்
23★11★1969

மறைவு
02★05★2006

**"பரம பிதா இரக்கமுள்ளவராய் இருப்பது போல்**
**நீங்களும் இரக்கமுள்ளவர்களாக இருக்கவேண்டும்"**

**என்று இயேசுவே நீர் எமக்குக் கற்பித்தீர்**
**நீர் சிலுவையில் வதைக்கப்பட்ட போது**
**உமது உயிர் போகும் வேளையிலும்**
**உம்மை வதைப்பவர்கள் மன்னிக்கும்படியாக வேண்டினீர்**
**நானும் அதேபோல் என் கணவரைக்**
**கொலை செய்தவர்களை மன்னிக்கும் மனப் பக்குவத்தை**
**எனக்கு அருளவேண்டும் என்றும், என் அன்புக்**
**கணவருக்கு வான் வீட்டில் இடம் அளித்திட**
**வேண்டும் என்றும் இரந்து மன்றாடுகின்றேன்.**

**கிறீஸ்துவே உமக்குப் புகழ்.**

*என் அன்புக் கணவரைத் திடீரென இழந்து நிர்க்கதியாய் நின்றபோது எமக்கு சகல வழிகளிலும் உதவிகள் பல புரிந்த உதயன் நிர்வாகப் பணிப்பாளர் அவர்களுக்கும் அவருடன் இணைந்து பல வழிகளில் உதவிகள் பல புரிந்த உதயன் நிறுவன ஊழியர்களுக்கும் மேலும் என் கணவரின் இறுதிச்சடங்கில் பங்குகொண்ட அனைவருக்கும் இவ்வேளையில் என் உளம் கனிந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன்.*

*அன்னாரின் வாழ்விற்கும் பணிக்குமான நன்றித் திருப்பலி யாழ். அடைக்கல மாதா (O.L.R.) தேவாலயத்தில் நாளை (01-06-2006) வியாழக்கிழமை காலை 6 மணிக்கு ஒப்புக்கொடுக்கப்படும்.*

*இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.*

(சி/49478) (24.11.15.26)

12, [illegible] லேன்,
யாழ்ப்பாணம்.

*பிரிவால் துயருறும்:*
**மனைவி, பிள்ளைகள்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆயுள்வேத வைத்தியசாலைகளின் மருந்துக் கொள்வனவுக்கு நிதி ஒதுக்கீடு

வடமராட்சி,மே31

யாழ். மாவட்டத்தில் உள்ள 12 உள்ளூராட்சி மன்றங்களின் கீழ் உள்ள சித்த ஆயுள் வேத வைத்தியசாலைகளின் மருந்துக்கொள்வனவுக்கென 29 லட்சத்து 70 ஆயிரம் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

வடக்கு - கிழக்கு மாகாண உள்ளூராட்சித்திணைக்களம் இந்த நிதி ஒதுக்கீட்டைச் செய்துள்ளது. யாழ். மாநகரசபைக்கு 10 லட்சத்து 50 ஆயிரம் ரூபாவும் சாவகச்சேரி பிரதேச சபைக்கு 3 லட்சத்து 50 ஆயிரம் ரூபாவும், வடமராட்சி தெற்கு, மேற்கு பிரதேச சபை, வலிகாமம் கிழக்கு பிரதேச சபை ஆகியவற்றுக்கு தலா 2 லட்சத்து 50 ஆயிரம் ரூபாவும் -

நல்லூர் பிரதேச சபைக்கு 2 லட்சம் ரூபாவும் வலி. தென்மேற்கு பிரதேச சபைக்கு ஒரு லட்சத்து 70 ஆயிரம் ரூபாவும் வலி. தெற்குப் பிரதேச சபைக்கு ஒரு லட்சத்து 65 ஆயிரம் ரூபாவும் -

வலி. மேற்குப் பிரதேச சபைக்கு ஒரு லட்சத்து 25 ஆயிரம் ரூபாவும் வேலணைப் பிரதேச சபைக்கு ஒரு லட்சத்துப் 10 ஆயிரம் ரூபாவும் ஊர்காவற்றுறை, பருத்தித்துறை, வலி. வடக்கு ஆகிய பிரதேச சபைகளுக்கு தலா ஒரு லட்சம் ரூபாவும் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

மேற்படி பிரதேச சபைகளின் கீழுள்ள ஆயுள்வேத வைத்தியசாலைகளுக்கு கடந்த ஆண்டு வழங்கப்பட்ட நிதி மற்றும் வருகை தந்த நோயாளர்களின் எண்ணிக்கை என்பவற்றின் அடிப்படையிலேயே இவ்வாண்டு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது என உள்ளூராட்சி ஆணையாளர் க.சபாபதிப்பிள்ளை தெரிவித்தார்.

(173)


## முதலாம் ஆண்டு நினைவலைகள்

தோற்றம் 05 - 02 - 1928



மறைவு 11 - 05 - 2005

**திருமதி சிவசுப்பிரமணியம் பூமணி**

ஆண்டு ஒன்று மறைந்தாலும்
உங்கள் அழியாத நினைவுகள்
நாங்கள் வாழும் வரை என்றென்றும்
எங்கள் மனங்களில் நிறைந்திருக்கும்

மஞ்சத்தடி,
இணுவில். (50711)

மகள் - மருமக்கள்
பேரப்பிள்ளைகள்
பூட்டப்பிள்ளைகள்.



பரு.தும்பளை நெல்லண்டைப் பத்திரகாளி அம்மன் கோயில்

**வருடாந்த வெளிமடைப் பொங்கல் - 2006**

மேற்படி உற்சவம் 2006.06.02ஆம் திகதி வெள்ளிக்கிழமை தொடங்கி மறுநாள் சனிக்கிழமை வரை நடைபெறவுள்ளது. காவடி, கரகம், பாற்செம்பு நேர்த்திக்காரர்கள் வெள்ளிக்கிழமை மாலை 6.00 மணிக்கு முன்னர் நேர்த்திகளைப் பூர்த்திசெய்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப் படுகின்றார்கள்.

'மடைப் பண்டம்' வெள்ளிக்கிழமை பிற்பகல் 4.00 மணி பூசையுடன் எடுக்கப்படும்.

சபா ரவீந்திரன் ஜே.பி.யு.எம். (தலைவர்) (சி/49486) கா.புஸ்பராசா (செயலாளர்)

தும்பளை நெல்லண்டை அம்மன் கோயில் தர்ம பரிபாலன சபை



வசீகர தோற்றத்திற்கு

**சந்தனாலேப**

(குளிர்ச்சி தரும் ஆயுள்வேத மேல் பூச்சு மருந்து)



சந்தனாலேப

யாழ்.மாவட்ட ஏக விநியோகஸ்தர்
"சிவா நறுமணப் பூங்கா"
288, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
T.Phone: 222 2567

சகல பார்மஸிகளிலும் பெற்றுக்கொள்ளலாம்.

(சி/47483) (23-32-15-14)

MANUFACTURED By:
SAN JEEWAKA AYURVEEDIC PRODUCTS
VEYANGODA SRI LANKA AYY PRO NO: REG.NO A/L 250



சாவகச்சேரிநகர் - சங்கத்தானை - இத்தியடி அருள்மிகு

ஸ்ரீ வீரகத்தி விநாயகர் தேவஸ்தானம்

**மஹாகும்பாபிஷேக விஞ்ஞாபனம்**

கிரியாரம்பம்: 03.06.2006 சனிக்கிழமை அதிகாலை 5 மணி

எண்ணெய்க்காப்பு: 06.06.2006 செவ்வாய்க்கிழமை காலை 8 மணி - 5 மணி வரை

கும்பாபிஷேகம்: 07.06.2006 புதன்கிழமை காலை 6.31 மணி - 8.29 மணி வரையுள்ள மிதுனலக்கின சுபவேளை.

(50703)(32-15-14)

அனைவரும் வருக! விநாயகன் அருள் பெறுக!!

ஆலய பரிபாலன சபை.

விளம்பர அனுசரணை:
தனுஷன் ஜுவெலரி,
இல. 21, கச்சாய் வீதி, சாவகச்சேரி.



A2Z COM.COM இன் அதிரடி விலைக்கழிவு

தரம் வாய்ந்த
Flash memory Sticks..(USB)
முற்றிலும் வித்தியாசமான அழகிய வடிவமைப்பில்
ஒரு வருட உத்தரவாதத்துடன்
With Password protection
எங்குமில்லாத விலையில்
256 MB - 2950/=
512 MB - 4200/=
மொத்தமாகக் கொள்வனவு செய்பவர்களுக்கு சலுகை விலைகள்.. TP 0776956664
@ 192, Navalar Road, Jaffna
(ஈழநாடு அலுவலகம் முன்பாக,பெருமாள் கோவிலடி)
கையிருப்பு உள்ளவரை மட்டுமே !



PERSONAL CLASSES
364, Stanly Rd., Jaffna.
G.A.Q., BA-I, B.A.
யாழ்ப்பாணம் - பேராதனை
அனைத்து பிரிவு வகுப்புகளும் வழமை போல் நடைபெறுகின்றன.
G.A.Q. - ENGLISH PAPER
அநேக 2008 மாணவர்களின் விருப்பத்திற்கான தமிழ்-2008, பிரிவு 1 மட்டும்
அனுமதியைப் பெற்றுக்கொள்ளவும்
தமிழ் - தர்மராஜா
ENGLISH - MAHESWARAN



ராஜா யாழ்ப்பாணம்
பரத், பத்மபிரியா, ஆர்யா நடித்த
**பட்டியல்**
புதிய வெளியீடு
காட்சி நேரம்: 10.30, 2.30 மட்டும்



நாதன்ஸ் சினிமா யாழ்ப்பாணம்
மனிதக் குரங்கொன்றின் நெஞ்சை உருக்கும் கதை கொண்ட சாகசச் சித்திரம்
பீட்டர் றிட்சஸ்சனின்
**கிங் - கொங் King Kong**
தங்கத் தமிழ் மொழியில்
(பாடசாலை மாணவர்களுக்கு விசேட சலுகை)
காட்சி நேரம் : 10.30, 2.30



**ஜயோதா**

உத்தியோகபூர்வ முடிவுகள்

டிக்கட் தொடர் இல. 6647558 முதல் 6657190 வரை. சீட்டிழுப்பு இல. 240 திகதி 29-05-2006

வெற்றி எண்கள்

2 3 3 0 5 5 சுப்பர் எண் 21

ஜக்பொட் பரிசு ரூ. 10,454,475/- வெல்லப்படவில்லை

| வெற்றி எண்கள் | வெற்றி பெற்றோர் | பரிசுத் தொகை | முழு பரிசுத் தொகை |
|---|---|---|---|
| 6 எண்களுடன் சுப்பர் எண் | "0" | 10,454,475/= | - |
| இடது பக்கமிருந்து முதல் 6 எண்கள் | 01 | 1,000,000/= | 1,000,000/= |
| இடது பக்கமிருந்து முதல் 5 எண்கள் | 08 | 50,000/= | 400,000/= |
| இடது பக்கமிருந்து முதல் 4 எண்கள் | 85 | 5,000/= | 425,000/= |
| இடது பக்கமிருந்து முதல் 3 எண்கள் | 844 | 500/= | 422,000/= |
| இடது பக்கமிருந்து முதல் 2 எண்கள் | 8453 | 50/= | 422,650/= |
| இடது பக்கமிருந்து முதல் 1 எண் | 83759 | 10/= | 837,590/= |
| வலது பக்கமிருந்து முதல் 5 எண்கள் | 08 | 5,000/= | 40,000/= |
| வலது பக்கமிருந்து முதல் 4 எண்கள் | 84 | 1,000/= | 84,000/= |
| வலது பக்கமிருந்து முதல் 3 எண்கள் | 849 | 100/= | 84,900/= |
| வலது பக்கமிருந்து முதல் 2 எண்கள் | 8376 | 20/= | 167,520/= |
| | | மொத்தம் ரூ. | 3,883,660/= |
| மோட்டார் சைக்கிள்களின் பெறுமதி | 08 | 75,325/= | 602,600/= |

வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை 4,486,260/-

ரூ. 75,325/- பெறுமதியான ஈட்டி மோட்டார் சைக்கிள்களை வெற்றிபெற்ற 1 டிக்கட்டுகளின் தொடர் இலக்கங்கள்

| | |
|---|---|
| குருணாகல் | 6655636-3-06 |
| அம்பாறை | 6652666-4-30 |
| பொலன்னறுவை | 6649897-7-82 |
| மட்டக்களப்பு | 6654340-7-66 |
| காலி | 6655104-9-80 |
| அம்பாந்தோட்டை | 6652421-5-45 |
| அநுராதபுரம் | 6656078-3-73 |
| கண்டி | 6648965-7-28 |

இந்த வியாழக்கிழமை சுப்பர் ஜக்பொட் ரூ. 10,689,475/-

தொடர் இல. 7560669 க்கு மேற்பட்ட செலாசுரன் நிற டிக்கட்டுகள் 2006 ஜூன் 01 ஆம் திகதி வியாழக்கிழமை சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

வளமான வாழ்விற்கு அபிவிருத்தி லொத்தர்

அபிவிருத்தி லொத்தர் சபை
33, சென் மைக்கல் வீதி, கொள்ளுப்பிட்டி, கொழும்பு 03.


## மரண அறிவித்தல்கள்

### சின்னத்துரை மகேந்திரன்



யாழ்ப்பாணம், 215/9, ஆஸ்பத்திரி வீதியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்துரை மகேந்திரன் அவர்கள் 29.05.2006 அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னத்துரை - அருளம்மா தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்ற ஜோசப், ரவீந்திரன் மற்றும் அக்னஸ், சறோஜினி, மகேஸ்வரி, தவம், புஸ்பம், றஞ்சன், சாந்தினி (ஆசிரியர், யாழ்.திருக்குடும்ப கன்னியர் மடம்) ஆகியோரின் அன்புச் சகோதரனும் கோமதி (சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர், யாழ்.பிரதேச செயலகம்), றொசான் (கனேடியன் செஞ்சிலுவைச் சங்கம், கிளிநொச்சி), தயானி ஆகியோரின் மாமனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (31.05.2006) புதன்கிழமை பிற்பகல் 3 மணியளவில் யாழ்.அடைக்கல அன்னை ஆலயத்தில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு, புனித கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலைக்கு நல்லடக்கத்திற்காக எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

215/9, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம். (50706)(32-15-14)

தகவல்:
சகோதரர்கள், மருமக்கள்.

### திருமதி கிறிஸ்தோப்பர் பிரான்சிக் அம்மா



உயரப்புலம் ஆனைக்கோட்டையை சேர்ந்த கிறிஸ்தோப்பர் பிரான்சிக் அம்மா நேற்று (30.05.2006) செவ்வாய்க்கிழமை காலமாகி விட்டார்.

அன்னார் கிறிஸ்தோப்பரின் அன்புமனைவியும் அன்ரனி ஜோசப், மேரி றெஜினா, மேரி லெற்றிசியா, அன்ரனி டொறிங்ரன், பிரான்சீஸ் ஸ்ரீபன் ஜோர்ஜ், மேரி - டனியலா (இத்தாலி) ஆகியோரின் அன்புத் தாயும் காலஞ்சென்ற மேரி சுசிலா, லூர்த்து மரியநாயகம், ஞானசீலன், மேரி சுலோசினா, டியர்னா, கமில்ரன்(இத்தாலி) ஆகியோரின் அன்பு மாமியுமாவார்.

அன்னாரின் நல்லடக்கம் இன்று(31.05.2006) புதன்கிழமை மாலை 4 மணிக்கு ஆனைக்கோட்டை அடைக்கலநாயகி சேமக்காலையில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

பிடாரி அம்மன் கோவிலடி,
ஆனைக்கோட்டை. (50714)

தகவல்:
பே. கிறிஸ்தோப்பர்
(கணவர்)

## மரண அறிவித்தல்

### மைக்கேல் யேசுதாசன் (J.P)



நவாலியைப் பிறப்பிடமாகவும் நாவாந்துறையை வசிப்பிடமாகவும் கொண்ட மைக்கேல் யேசுதாசன் 29.05.2006 திங்கட்கிழமை அகால மரணமானார்.

அன்னாரின் பூதவுடல் இன்று(31.05.2006) புதன்கிழமை பிற்பகல் 3 மணிக்கு இரங்கல் திருப்பலிக்காக புனித நீக்கிலார் ஆலயத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டு பின்னர் நல்லடக்கத்துக்காக நாவாந்துறை சேமக்காலைக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கடற்கரை வீதி,
நாவாந்துறை,
யாழ்ப்பாணம். (50712)

தகவல்:
மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்., மன்னார் ஆயர்கள் ஜனாதிபதியுடன் சந்திப்பு




கொழும்பு, மே 31

யாழ்ப்பாணம் மற்றும் மன்னார் மாவட்டங்களின் ஆயர்கள் நேற்று ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவைச் சந்தித்து தற்போதைய அரசியல் நிலைவரம் குறித்துப் பேசியுள்ளனர்.

வடக்கு-கிழக்கில் பொது மக்கள் பலர் கொல்லப்படுவது தொடர்பாக இந்தச் சந்திப்பில் ஆயர்கள் அதிகம் கவனம் செலுத்தினர் என்று தெரிவிக்கப்பட்டது. அத்துடன் பாதுகாப்புக் காரணங்களுக்காக மக்கள் இடம்பெயர்வது குறித்தும் அவர்கள் ஜனாதிபதிக்கு எடுத்துவிளக்கியுள்ளனர்.

பொதுமக்கள் கொல்லப்படுவதைத் தடுத்து நிறுத்துவதற்கு ஜனாதிபதி உடனடியாக நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று அவரிடம் ஆயர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். அதேநேரம் விடுதலைப் புலிகளுடன் விரைவில் பேச்சுக்களை ஆரம்பிப்பதற்கு அரசு உடன் நடவடிக்கை எடுக்கவேண்டும் என்றும் ஆயர்கள் கோரியுள்ளனர் என்று அவர்களுக்கு நெருக்கமான வட்டாரங்கள் தெரிவித்தன. (ம)



ஜப்பான் தலைநகர் டோக்கியோவில் நேற்று நடைபெற்ற இலங்கைக்கு உதவி வழங்கும் மாநாட்டின்போது முக்கிய பிரதிநிதிகள் கைலாகு கொடுக்கும் காட்சி.

## சிங்கள மக்களின்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப் பட்டிருப்பதாவது:-

இலங்கையின் கிழக்கில் 13 அப்பாவிச் சிங்களப் பொதுமக்கள் படுகொலை செய்யப் பட்டதற்கு தமிழீழ விடுதலைப் புலிகள் கண்டிக் கின்றனர். அப்பாவிப் பொது மககளைப் படுகொலை செய்வதை எந்த ஒரு சூழலிலும் நியாயப்படுத்த முடியாது.

இந்தப் படுகொலைகள் தொடர்பாக தமிழீழ விடுதலைப் புலிகள் மீது குறிப்பிட்ட சர்வதேச செய்தி நிறுவனம் குற்றம் சாட்டியுள்ளமை எமக்கு அதிர்ச்சியளிக்கிறது. இது தொடர்பில் எம்மைத் தொடர்பு கூடக் கொள்ளாமல் தங்களது செய்தியை அந்நிறுவனம் வெளியிட்டுள்ளது. எதிர்பாராத விதமாக சில முன்னணி ஊடகங்களும் இதைப் பி ரசுரம் செய்துள்ளன.

தமிழீழ விடுதலைப் புலிகளை தொடர்பு கொள்ளாமலேயே தமிழீழ விடுதலைப் புலிகள் மீது குற்றம் சாட்டும் அதே சர்வதேச செய்தி நிறுவனம், ஏற்கனவே இரு சம்பவங்களை வெளியிட்டிருந்த மையை நாம் சுட்டிக் காட்டுகிறோம்.

மே 20 ஆம் திகதியன்று கிழக்குப் பகுதியில் மாவடிவேம்பில் 12 வயதுச் சிறுவன் சுட்டுக் கொல்லப்பட்டார். தமிழீழ விடுதலைப் புலிகள் அந்தச் சிறுவனை படையணியில் சேர்க்க முயற்சித்தபோது அச்சிறுவன் மறுத்ததால் விடுதலைப் புலிகளே சுட்டுக் கொன்றார்கள் என்று ஸ்ரீலங்கா இராணுவம் கூறுவதாகவும் செய்தி வெளியிடப்பட்டிருந்தது.

மே 21 ஆம் திகதியன்று திருகோணமலையில் மூன்று வெளிநாட்டு உதவி நிறுவனங்கள் தாக்கப்பட்டன. அதே செய்தி நிறுவனம் தலைப்பிலேயே தமிழீழ விடுதலைப் புலிகள் மீது சந்தேகம் தெரிவித்து செய்தி வெளியிட்டிருந்தது. இந்தச் சம்பவம் தொடர்பாக ஐரோப்பிய ஒன்றியம் வெளியிட்ட அறிக்கையிலோ, தாக்குதல் குறித்து உடனடி விசாரணைகளை மேற்கொள்ளுமாறு ஸ்ரீலங்கா அரசாங்கத்தை வலியுறுத்தியது.

இத்தகைய ஆதாரமற்ற வகையிலான செய்தியை சர்வதேச செய்தி நிறுவனம் வெளியிடுவது குறித்து நாம் அதிர்ச்சியடைகிறோம்.

படுகொலை செய்யப்பட்டுள்ள 13 அப்பாவிச் சிங்களவர் குடும்பங்களுக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

- என்று அதில் கூறப்பட்டுள்ளது. (க)

## வெலிகந்தையில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஓமடியாமடுக் கிராமத்தில் இலங்கை இராணுவத்துடன் சேர்ந்தியங்கும் துணைப் படைகளின் உறுப்பினர்கள் பலர் இருந்தனர் எனத்தெரிவிக்கப்படுகிறது. தாக்குதல் நடத்தியோர் கிராமத்திலுள்ள குடிசைகள் பலவற்றிற்குத் தீவைத்துள்ளனர். கொலைச் சம்பவத்தையடுத்து மேற்படி கிராமத்திலிருந்த சிங்கள மக்கள் வெளியேறி வெலிகந்தையில் அகதிகளாகத் தஞ்சம் புகுந்திருக்கின்றனர்.

இதேவேளை, இந்தச் சம்பவம் தொடர்பில் புலிகள் மீது சுமத்தப்படும் குற்றச்சாட்டுக்களை புலிகளின் சமாதானச்செயலகம் நேற்று நிராகரித்திருக்கிறது. மேற்படி கிராமத்தில் அரச படைகள் இயங்கிவந்தன எனப் புலிகளின் சமாதானச் செயலகம் விடுத்துள்ள அறிக்கையொன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (க)

## பங்குச்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

புலிகளை, ஐரோப்பிய ஒன்றியம் தடை செய்ததையடுத்து நாட்டில் மீண்டும் ஒரு போர் மூளக்கூடிய அச்சம் உருவாகியிருப்பதே இந்தப் பின்னடைவுக்குக் காரணமென கொழும்பு பங்குச் சந்தைத் தரகரொருவர் கூறினார். (க)

## அராலியில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

டன என்று முன்னர் வந்த தகவல்கள் தெரிவித்தன.

சம்பவ இடத்திற்குச் சென்ற மல்லாகம் நீதிவான் திருமதி சறோஜினி இளங்கோவன் சடலங்களைப் பார்வையிட்டார். சடலங்களில் தலையிலும், நெஞ்சிலும் சூட்டுக் காயங்கள் காணப்பட்டன என மரண விசாரணையில் தெரிவிக்கப்பட்டது.

அதனையடுத்துச் சடலங்களைப் பிரேத பரிசோதனைக்காக யாழ். ஆஸ்பத்திரிக்கு அனுப்பும்படி உத்தரவிட்ட நீதிவான், பிரேத பரிசோதனையின் பின் உறவினர்களிடம் கையளிக்கும்படி பொலீஸாருக்கு உத்தரவிட்டார்.

# கைதான கருணா குழு உறுப்பினர்களுடன் கண்காணிப்புக் குழுவினர் நேற்றுச் சந்திப்பு

கொழும்பு, மே 31

கடந்த 26ஆம் திகதி மூதூரில் இடம்பெற்ற தாக்குதலின் போது விடுதலைப் புலிகளால் கைது செய்யப்பட்ட கருணா குழுவைச் சேர்ந்த இருவர் நேற்று கண்காணிப்புக் குழுவினருக்கும் சர்வதேசச் செஞ்சிலுவைக் குழுவினருக்கும் பத்திரிகையாளர்களுக்கும் பேட்டியளித்தனர்.

நேற்று செவ்வாய்க்கிழமை புலிகளின் மாவட்ட சமாதானச் செயலகத்தில் இந்தச் சந்திப்பு இடம்பெற்றது. திருமலை பட்டியடி இராணுவ முகாமில் இருந்து புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் நுழைய முயன்ற படையினர் மற்றும் ஒட்டுப்படையினர் அடங்கிய குழுவினருக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் ஏற்பட்ட மோதலின் போது இவர்கள் இருவரும் கைது செய்யப்பட்டனர். இவர்களுடன் வந்தவர்களில் 3 பேர் கொல்லப்பட்டனர். இருவர் கைது செய்யப் பட்டனர். அவர்களேநேற்றுப் பேட்டியளித்தனர்.

மதுரங்குழியைச் சேர்ந்த விஜேந்திரன் (வயது 25), பனிச்சங்கேரியைச் சேர்ந்த எஸ். குணராஜன் (வயது 22) ஆகியோரே புலிகளிடம் சரணடைந்தவர்களாவர். கருணா குழு தொடர்பாகத் தற்போதைய நிலையை அவர்கள் தெளிவுபடுத்தினர்.

தம்முடன் சேர்ந்து 10 பேர் திருமலையில் இருந்து 'டொல்பின்' வான் ஒன்றில் தீவுச் சேனைக்கு அழைத்துச் செல்லப்பட்டனர் என்றும் -

திருகோணமலையில் உள்ள கடற்கரையை அண்டிய இராணுவ முகாம் ஒன்றில் தமக்குப் பயிற்சியளிக்கப்பட்டது என்றும் - அவர்கள் கூறினர். பின்னர் தாம் உட்பட 5 பேர் பட்டியடி இராணுவ முகாமுக்கு மாற்றப்பட்டனர் என்றும் அவர்கள் கூறினர்.

குறைந்தபட்சம், தீவுச்சேனையில் 5 கருணா முகாம்கள் இருக்கின்றன என்றும் அவர்கள் கூறினர். இந்தச் சந்திப்பில் புலிகளின் திருகோணமலை மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் எழிலனும் கலந்து கொண்டார். (ம)

## தடை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விடுதலைப் புலிகள் வன்முறைகளைக் கைவிட்டு, அமைதிப் பேச்சுகளுக்குத் திரும்புவதற்கு ஒரு நிர்ப்பந்தமாக அமையும். அதேபோல் அரசின் சமாதானச் செயற்பாடுகளை முன்னேற்றவும் இது உதவும். என்று அந்த அறிக்கையில் குறிப்பிடப் பட்டுள்ளது. (க)

## அமெரிக்க உதவிச் செயலர் நாளை இலங்கை வருகை!

கொழும்பு, மே 31

தெற்கு மற்றும் மத்திய ஆசியாவுக்குப் பொறுப்பான அமெரிக்க உதவி இராஜாங்கச் செயலர் ரிச்சர்ட் பௌச்சர் நாளை இலங்கைக்கு விஜயம் மேற்கொள்ளவுள்ளார்.

நேற்று ஜப்பான் தலைநகர் டோக்கியோவில் நடைபெற்ற இலங்கைக்கு உதவும் இணைத் தலைமைகளின் கூட்டத்தில் கலந்துகொண்ட அவர் நாளை கொழும்பு வருகின்றார் என்று அமெரிக்கத் தூதரகம் தெரிவித்தது.

இந்த விஜயத்தின் போது அவர் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவையும் வர்த்தகப் பிரமுகர்களையும் சந்தித்து நாட்டின் தற்போதைய அரசியல் மற்றும் வர்த்தக நிலைமை பற்றிக் கேட்டறிவார் என்றும் அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருந்தது.

ரிச்சர்ட் பௌச்சர் இதற்கு முன்னர் 2005 ஆம் ஆண்டு ஜனவரி மாதமும் இலங்கைக்கு விஜயம் செய்திருந்தார். அப்போதைய அமெரிக்க வெளிவிவகார அமைச்சர் கொலின் பவலுடன் அவர் வருகை தந்திருந்தார். அச்சமயத்தில் அவர், பொதுவிவகாரங்களுக்கான உதவிச் செயலாளராகப் பணியாற்றி வந்தார். (ம)

O/L DAY CLASS
பிரிவு - 2இல் இன்னும் சொற்ப அனுமதிகள் உள்ளதால் அனுமதிக்கு முந்துங்கள்.
* பிரிவு - 3 வெகுவிரைவில்
நாவலர்
ஆனைப்பந்தி, யாழ்.நகர்.

எலைற் கல்வி நிறுவனம்
147, கச்சேரி நல்லூர் வீதி, யாழ்.
O/L MATHS
கணிதம் சித்தியடையாத, கணிதத்தில் பின்தங்கிய மாணவர்களுக்கானவிசேட பிரத்தியேக வகுப்பு.
ஆசிரியர் திரு.T.அற்புதராஜா
ஆரம்பம்: 02.06.2006
வெள்ளி காலை 6.30 மணி
* 30 மாணவர்களுக்கு மட்டும் அனுமதி வழங்கப்படும்.

COMPUTER EXPRESS
Institute of Information Technology
இல.15, சிறாம்பியடி வீதி, யாழ்ப்பாணம் (off Stanly Rd.)
021-222 8250,0777 222422
80% Off
அனைத்துக் கணனிக் கற்கை நெறிகளிற்கான புதிய பிரிவுகள் ஆரம்பிக்கப்படவுள்ளன.
Batch I :- 02/06/2006
Batch II :- 03/06/2006
Batch III :- 04/06/2006

College Of CHEMISTRY
INORGANIC
ORGANIC
By. DIAS
புதிய பிரிவு ஆரம்பம்
பழம் றோட், திருநெல்வேலி.

தேவை
அலுவலக உதவியாளர் (CLERK), ஆசிரியர்கள்
தரம் 1-5 வரை கணிதம், தமிழ்
தரம் 6-9 வரை ஆங்கிலம், சுகாதாரம்
கற்பிக்கக்கூடிய பயிற்றப்பட்ட ஆசிரியர்கள் நேரில் வரவும்.
அலுவலக உதவியாளர்
(கணனி அறிவுடையோர் விரும்பத்தக்கது)
சுயவிவரக்கோவையுடன் நேரில் வரவும். மு.ப. 10 மணிக்குப் பின்
நாவலர் இன்ஸ்ரிரியூட்
ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.
T.P.No.: 0777 243527, 222 8068

A/L 2006
பல்கலை அனுமதியைத் தீர்மானிக்கும்பொதுச் சாதாரண பரீட்சை நூல்.
P.உமாசங்கர் / P.கமல்தாசன்
சொற்ப பிரதிகள்
பூபாலசிங்கம் புத்தகசாலை

விக்னா கல்வி நிறுவனம்
52, ஸ்ரான்லி வீதி, யாழ்.
O/L DAY CLASS
(பிரிவு 3)
02.06.20006 (8.30 - 2.30)
பிரிவு 4 மிகவிரைவில்
தரம் 6 தொடக்கம்
O/L EVENING CLASS
தவணை 2இற்கான விடுமுறை நாள்களில் மாலை 1.00

NEW SCIENCE CENTRE
யாழ்.நகர்
"ORGANIC CHEMISTRY"
ஆரம்பம்: 01.06.2006 Thurs 10 a.m.
A/L 2008
புதிய பிரிவு
ஆரம்பம்: 03.06.2006 Sat. 11.30 a.m.
By: அன்பழகன் B.Sc.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 31.05.2006இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.